ශ්‍රී ලංකා උත්තේජක මර්දන නියෝජ්‍යායතනය

ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை

Sri Lanka Anti-Doping Agency

ග්‍රාමීය හා පාසල් ක්‍රීඩා යටිතල පහසුකම් ප්‍රවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය

கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு

State Ministry of Rural and School Sports Infrastructure Improvement

# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# Annual Report

# 2021

# இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

## வருடாந்த அறிக்கை 2021

## தமிழ்மொழிப் பதிப்பு

# பொருளடக்கம்


1 நிறுவனம் பற்றிய விபரங்கள் ........ 1-2

2 எமது நோக்கு, பணிக்கூற்று மற்றும் நோக்கம் ........ 3-4

3 முக்கியமான மைல்கற்கள் ........ 5

4 பிரதான செயற்திறன் பற்றி சாராம்சம் ........ 6

5 தலைவருடைய வாழ்த்துச்செய்தி ........ 7-8

6 பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச்செய்தி ........ 9-10

7 பணிப்பாளர் குழு ........ 11

8 பணிப்பாளர் குழு அறிக்கை ........ 12-13

9 நிறுவன கட்டமைப்பு மற்றும் பணியாளர்கள் பற்றிய விபரங்கள் ........ 14-15

10 செயன்முறைசார் முன்னேற்றம்

- கல்வி மற்றும் பரிசோதனைப்பிரிவு ........ 17-22
- சட்டப் பிரிவு ........ 23
- அமலாக்க மற்றும் செயற்படுத்தல் பிரிவு ........ 24-26
- ஆராய்ச்சிப் பிரிவு ........ 27-31
- தகவல் தொழிநுட்பப் பிரிவு ........ 32-34
- நிர்வாகப் பிரிவு ........ 35

11 நிலைபெறுதகைமை பற்றிய அறிக்கை ........ 36-38

12 நிறுவன முகாமைத்துவம் ........ 39-40

13 அபாய முகாமைத்துவ அறிக்கை ........ 41-42

14 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ அறிக்கை ........ 43-44

15 நிதி அறிக்கை ........ 45-57

16 சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை ........ 58-64

17 முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ........ 65-67

# இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

மனிதன் படிப் படியாக பரிணாம வளர்ச்சியடைந்து சமூகமயமாவதற்கு முயற்சிக்கும் தருணத்தில், தனது வாழ்க்கைத் தேவைகளை பூர்த்திசெய்ய முற்படுகையில் சுற்றுச்சூழலுக்கும் வனவிலங்குகளுக்குமிடையிலான மோதலின் விளைவாக விளையாட்டு தோற்றம் பெற்றது. பின்னாளில் இது பொழுதுபோக்காக வளர்ச்சிபெற்று நடைமுறையில் விளையாட்டு ஒரு கருத்தாக மேம்பட்டு தொழில்துறை ரீதியான மற்றும் வணிக ரீதியான பரிமாணத்தை பெற்று வருகிறது.

இதன் பெறுபேறாக தற்போதைய விளையாட்டு வீர வீராங்கனைகள் வெற்றியை மாத்திரமே நோக்காகக்கொண்டு செயற்படுவதன் விளைவாக விளையாட்டில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் களத்திற்கு வந்துள்ளன.

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுக்களில் இத்தடைசெய்யப்பட்ட பொருட்களின் பாவனையானது விளையாட்டின் நம்பகத்தன்மையைப் பாதிப்படையச்செய்வதோடு மட்டுமன்றி இறுதியில் நாடென்ற ரீதியில் சர்வதேச சமூகத்தின் மத்தியில் அபகீர்த்தியை ஏற்படுத்துகிறது மேலும்இஆற்றல்மிக்க நாட்டின் எதிர்கால சந்ததியின் ஆரோக்கியத்தை சீரழிவடையச்செய்கின்றது.

சர்வதேச அளவில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையை தடுக்கும் வகையில் கடந்த 1999ம் ஆண்டு முதல் கனடாவின் மொன்றியல் நகரத்தில் செயற்பட்டு வரும் உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையைத் தொடர்ந்து 2013 ஆம் ஆண்டுவரை விளையாட்டுகளில் ஊக்குப்பதார்த்தப் பாவனையை தடுத்தல் மற்றும் அது சம்பந்தமான பிரதிநிதித்துவமானது விளையாட்டு வைத்திய நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விடயத்தைக் கையாள்வதற்காக சுயாதீனமாக இயங்கும் தனியான நிறுவனமொன்றின் தேவைப்பபடானது ஏற்கனவே இருந்ததன் காரணமாக 2013 ஆம் ஆண்டு நவம்பர் 10 ஆம் திகதியன்று 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டமானது நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் 3ஆம் பிரிவின் கீழ் தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளை இலங்கை விளையாட்டிலிருந்து வேரோடு அழித்தல் என்ற வாசகத்தை தலைப்பாகக்கொண்ட இலங்கை ஊக்குப்பதார்த்தப்பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது ஒரு சட்டபூர்வ வாரியமாக உருவாக்கப்பட்டது.

தற்போது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் சட்டபூர்வ வாரியமாக செயற்பட்டுவருகின்றது.

விளையாட்டு வீர வீராங்கனைகள் விளையாட்டின்போது பயன்படுத்தக்கூடாத தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களை வேரோடு அழித்தல் மற்றும் சிறந்த தூய்மையான விளையாட்டை ஊக்குவித்தல் ஆகியவை இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிரதான நோக்கங்களாகும்.



# நிறுவனம் பற்றிய விபரங்கள்

**நிறுவனத்தின் பெயர்**

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

**சட்டரீதியான வடிவமைப்பு**

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் இந்நிறுவனமானது ஸ்தாபிக்கப்பட்டது.

**ஆரம்பிக்கப்பட்ட திகதி**

2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10 ஆம் திகதி

**காரியாலயம் பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி**

363/12, சுகததாச விளையாட்டரங்கு - ப்ளொக் டி, ஸ்டேடியம் பார்க்கிங் ரோட், சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.

**தொடர்பிலக்கம்**

011 3071 838 / 011 2328 366

**மின்னஞ்சல் முகவரி**

sladasl@yahoo.com

**இணைய முகவரி**

www.antidopingsrilanka.org

**வரி அடையாள எண்**

409386822

**கணக்காய்வாளர்**

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

**வங்கியாளர்கள்**

இலங்கை வங்கி

# எமது நோக்கு

### தூய்மையான விளையாட்டின் பாதுகாப்பு

போட்டியின் மூலம் விளையாட்டு வீர வீராங்கணைகளின் மதிப்பு மற்றும் நேர்மையைப் பாதுகாக்கும் உரிமையை நாம் நிலைநாட்டுகின்றோம். விளையாட்டின் கொள்கைகள் மூலம் நியாயமான விளையாட்டு, ஒருவரது எதிராளிக்கு வழங்கப்படும் மரியாதை மற்றும் விளையாட்டு வீரர் ஒருவருடைய அடிப்படை உரிமைகளை எதிர்ப்பார்க்கின்றோம். இதன் மூலம் அனைத்து விளையாட்டு வீரர்களும் ஆரோக்கியமாகவும் தூய்மையாகவும் போட்டியிடுவதற்கான உரிமைகளை நாம் பாதுகாக்கின்றோம்இ எனவே அவர்களின் வெற்றிகள் உண்மையாகவே போற்றத்தகுந்தவையாகும்.

# எமது பணிக்கூற்று

ஊக்குப்பதார்த்தப் பாவனைக்கான அபாயத்தைக் குறைப்பதை இலக்காகக் கொண்ட ஈடுபாடு, தடுப்பு, கண்டறிதல் மற்றும் அமலாக்க நடவடிக்கைகள் மூலம் விளையாட்டு வீரர்களின் ஆரோக்கியத்தையும் இலங்கை விளையாட்டின் ஒருமைப்பாட்டைப் பாதுகாத்தல்.



# நோக்கங்கள்

## முதன்மை நோக்கம்

- இலங்கையின் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான கொள்கைக்கு இணங்க செயற்படுவதை ஆதரித்தல்.

## துணை நோக்கங்கள்

- தேசிய ஊக்குப்பதார்த்தக் கொள்கை குறித்து அரசாங்கம், விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு தெரியப்படுத்துதல்.
- 2021 உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச நியமங்களை இலங்கை முழுவதும் நடைமுறைப்படுத்துவதில் முன்னணி வகித்தல்.
- தேசிய ஊக்குப்பதார்த்தக் கொள்கைக்கு இணங்குவதற்காக அனைத்து விளையாட்டுச் சங்கங்கள்/ நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்குதல்.
- வணிகரீதியாக தொடர்புபடக்கூடிய உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிராந்திய ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களோடு புதுப்பிக்கப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நடைமுறைகள் மற்றும் நிபுணத்துவ அறிவை பகிர்ந்துகொள்ளல்.
- WADA மற்றும் iNADO உட்பட பலம்வாய்ந்த ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களோடு ஒத்துழைப்புடன் செயற்படுதல்.
- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த உயர்மட்ட விளையாட்டு நிகழ்வுகளில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நடவடிக்கைகள் குறித்த நிபுணத்துவ ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலை வழங்குதல்.
- அனைத்து முக்கிய போட்டி நிகழ்வுகள் சார்ந்த பொறுப்புகளை உலகத்தர நியமங்களுக்கமைவாக நிறைவேற்றுதல்.
- தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டை தடுப்பதற்கான அபாய அடிப்படையிலான ஒருங்கிணைந்த திட்டத்தை வழங்குதல்.
- இலங்கையில் விளையாட்டுக்களில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையின் அபாயங்களை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களைக் கொண்டு தொடர்ந்து மதிப்பீடு செய்தல்.
- சட்ட அமலாக்கம் உட்பட நடைமுறையிலுள்ள முகாம்கள் மூலம் புலனாய்வுத் தகவல்களைச் சேகரிப்பதில் திறன்களை மேம்படுத்தல்.
- இலங்கையின் விளையாட்டு மற்றும் கல்வித் தத்துவம் வாயிலாக கல்வித்திட்டங்கள் வாயிலாக தடுப்பு அடிப்படையிலான நன்னெறிகளை வலுவடையச்செய்தல், மிகப் பொருத்தமான நடைமுறைக்கருவிகள் மற்றும் ஆதரவு வழங்கும் சேவைகளை மேம்படுத்துதல் மூலமாக உதவிகளை வழங்குதல்.
- உளவுத்துறைசார் விபரங்களுக்கு முன்னணி வழங்கக்கூடிய ஆற்றல்மிக்க மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பரிசோதனைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.
- ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறல்களை கடுமையான விசாரணைக்குட்படுத்தி வழக்குத்தாக்கல் செய்தல்.
- சர்வதேசக்கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பயன்படுத்தி விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு ஒரு சமநிலையான விளையாட்டுச்சூழலை மேம்படுத்தல்.

# முக்கியமான மைல்கற்கள்

**2013**

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையை ஸ்தாபித்தல்



PARLIAMENT OF THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA

CONVENTION AGAINST DOPING IN SPORT ACT, No. 33 OF 2013

**2018**

15 ஆவது ஆசிய - சமுத்திர பிராந்திய அரசுகளின் அமைச்சர்களுக்களுக்கான மாநாட்டை நடாத்துதல்



**2019**

ஐந்து மாடிகளைக்கொண்ட அலுவலகக் கட்டிடத் திறப்பு



**2021**

நவீன தொழிநுட்ப உபகரணங்களுடன் கூடிய ஆய்வுகூடத்தின் திறப்பு



# பிரதான செயற்திறன் பற்றி சாராம்சம்

| விபரம் | இலக்கம் | 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|---|
| தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களுக்கான பரிசோதனைகளை நடாத்துதல் | இலக்கம் | 134 | 276 | 260 | 106 | 177 |
| ஊக்குப்பதார்த்தப் பாவனையை உறுதிப்படுத்தல் | இலக்கம் | 5 | 10 | 6 | 2 | 4 |
| ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துதல் | இலக்கம் | 4 | 6 | 6 | 8 | 2 |
| மேன்முறையீட்டு விசாரணைகளை நடாத்துதல் | இலக்கம் | 1 | | 3 | | 4 |
| விளையாட்டு வீரர்கள் மற்றும் தொடர்புடைய நபர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்துதல் | நிகழ்ச்சிகள் | 51 | 67 | 46 | 28 | 29 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சிகளில் பங்கேற்றோர் | நபர்கள் | 3579 | 2114 | 3357 | 965 | 1072 |
| ஆராய்ச்சி தொடர்பான "Abstract" அறிக்கையின் வெளியீடு | இலக்கம் | 0 | 3 | 0 | 1 | 0 |
| ஆய்வு அறிக்கைகளை வெளியிடுதல் | இலக்கம் | 0 | 0 | 0 | 0 | 2 |
| மென்பொருள் உருவாக்கம் (கையடக்கத்தொலைபேசி மற்றும் இணையம்) | இலக்கம் | 0 | 1 | 1 | 1 | 0 |
| மொத்த பணியாளர்கள் | நபர்கள் | 17/27 | 23/27 | 23/27 | 22/28 | 22/29 |
| சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | ரூ.மி. | 11.1 | 13.1 | 13.4 | 13.4 | 15.5 |
| வருமானம் | ரூ.மி. | 0.03 | 0.42 | 0.72 | 2.93 | 1.85 |
| சொத்து மற்றும் உபகரணங்கள் | ரூ.மி. | 106 | 194 | 273 | 286 | 270 |
| நடைமுறைச்சொத்துக்கள் | ரூ.மி. | 14.9 | 2.3 | 4.9 | 4.6 | 7.4 |
| நடைமுறைப்பொறுப்புகள் | ரூ.மி. | 10.7 | 9.4 | 8.2 | 15.3 | 16.0 |



# தலைவருடைய வாழ்த்துச்செய்தி

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது 2021 ஆம் ஆண்டின் நிதியாண்டிற்கான சிறப்பான செயற்திறனை வெளிப்படுத்தியுள்ளது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். பல ஆண்டுகளாக தூய்மையான விளையாட்டை நோக்கி விளையாட்டு வீரர்களை வழிநடத்துவதன் ஊடாகவும் நியாயமற்ற போட்டிக்கு தடைவிதிப்பதன் ஊடாகவும் எமது நிறுவனமானது இலங்கையின் விளையாட்டுத்துறைக்கு பாரிய பங்காற்றி வருகின்றது.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தும் எம்நாட்டு வீர வீராங்கனைகள் சர்வதேச போட்டிகளில் பங்கேற்பதற்கான தகவின்மையை இழக்கின்ற (Non - Compliance) நிலைமையை தவிர்ப்பதற்காக நடைமுறைப்படுத்தவேண்டிய ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சர்வதேச நியமங்களை முறையாக பின்பற்றுவதற்கு எமது நிறுவனமானது பொறுப்புடன் செயற்பட்டு வருகின்றது.

விளையாட்டில் வெற்றியீட்டினும் தோல்வியடையினும் விளையாட்டு வீரருடைய/விளையாட்டினுடைய சுயகௌரவமானது அதன் தூய்மை மற்றும் உண்மைத்தன்மையின் அடிப்படையில் அசைக்கமுடியாததாக அமையும்.

தொடர்ச்சியான பயிற்சி, அர்ப்பணிப்பு மற்றும் தனித்துவமான திறமை ஆகியவற்றை சார்ந்து விளையாட்டில் வெற்றிக்கான சரியான பாதை அமைகிறது. எவ்வாறாயினும், நவீன தொழிநுட்ப வளர்ச்சியின் விளைவான தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தமானது தற்போதைய காலகட்டத்தில் விளையாட்டின் தூய்மைக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் உலக ஊக்குப்பதார்த்தப்பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் கீழ் செயற்பட்டுவரும் உலகெங்கும் பரந்துள்ள ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிறுவனங்களின் பங்கு முக்கியமானது. இலங்கையினுள் இத்தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களின் அபாயம் அதிகரித்து வருவதானது ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது. தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் தொடர்பான விழிப்புணர்வை இலங்கை விளையாட்டு வீர வீராங்கனைகள் மத்தியில் இல்லை என்பது ஆராய்ச்சி முடிவுகளின் மூலம் தெரியவந்துள்ளதோடு கடந்த சில ஆண்டுகளாக நாடளாவிய ரீதியில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பரவலாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இதன் மூலமாக தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனை காரணமாக ஏற்படும் தீயவிளைவுகள், அவர்கள் சட்டத்தின் முன்னிலையில் குற்றவாளிகளாக்கப்படுதல் மற்றும் எதிர்க்காலத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகள் பற்றிய புரிதலானது வழங்கப்படுகின்றது. இது தொடர்பாக விளையாட்டு வீரர்களுக்கு மட்டுமன்றி சம்பந்தப்பட்ட வேறு தரப்பினருக்கும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளன. தற்போதைய சவால்மிகுந்த சமூக மற்றும் பொருளாதார சூழ்நிலையிலும் விளையாட்டின் மேம்பாட்டிற்காக நடைமுறைப்படுத்தப்படும் நிகழ்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் விசாரணை நடைமுறைகள் அனைத்தையும் தொடரக்கூடியமையானது எமது நிறுவனத்திற்குக் கிடைத்துள்ள பாக்கியமாகக் கருதமுடியும். குறிப்பாக தற்போதுள்ள சவால்களுக்கு மத்தியில் விளையாட்டின் நம்பகத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துபவர்களை சட்டத்தின்முன் நிறுத்தும் பணியை தவறாமல் மேற்கொள்ள முடிந்துள்ளது. அதன்படி போட்டியின்போதும் போட்டிக்கு வெளியேயும் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களுக்காக சிறுநீர்மாதிரிகள்

பெரும்பாலும் சோதிக்கப்படுகின்றன. குறிப்பாக முறைப்பாடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையில் ஈடுபட்ட விளையாட்டு வீர வீராங்கனைகள் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் விளையாட்டுக்களில் ஈடுபடுத்தப்படும் விலங்குகளுக்கும் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள சம்பவங்கள் தொடர்பான செய்திகள் கடந்த ஆண்டுகளில் கிடைக்கப்பெற்றுள்ளன. இலங்கையில் நடைமுறையிலுள்ள ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சட்டமானது குதிரைப்பந்தயம் மற்றும் குதிரையேற்றத்தில் ஈடுபடுத்தப்படும் விலங்குகள் வரை விரிவுபடுத்துவதற்கான முயற்சிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன. விலங்குகளில் தடைசெய்யப்பட்டுள்ள ஊக்குப்பதார்த்தங்களைப் பயன்படுத்துவதானது ஏற்கனவே நடைமுறையிலுள்ள விதிமுறைகளின் கீழ் தடைசெய்யப்பட்டிருந்தாலும், அவற்றை மேலும் பரந்த மற்றும் வினைத்திறனான முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக குதிரையேற்றம் மற்றும் குதிரைப்பந்தயத்திற்கான தடைசெய்யப்பட்ட பொருட்களுக்கான பட்டிலானது தற்போது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அவ்விலங்குகளின் ஆரோக்கியத்திற்கு ஏற்படக்கூடிய தீயவிளைவுகளை தடுப்பதற்கும் விளையாட்டின் உயிர்ப்புத்தன்மையைப் பாதுகாப்பதற்கும் உதவக்கூடியதாக இருக்கின்றது.

அவ்வாறாக 2020 ஆம் ஆண்டு முதல் நிலவிய கோவிட் - 19 தொற்று காரணமாக 2021 ஆண்டிலும் எழுந்த சவால்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு பணிப்பாளர் குழுக் கூட்டங்கள் மற்றும் ஒழுக்காற்று மற்றும் மேன்முறையீட்டு விசாரணைகள் இணையத்தள வழியாக (Online) Zoom தொழிநுட்பத்தினூடாக இவ்வாண்டிற்குள் தொடர்ச்சியாக ஏற்பாடு செய்யப்பட்டன. ஏதிர்காலத்தில் நாடு பழைய நிலைக்கு மீண்டாலும் அதனூடாக பெறப்பட்ட தொழிநுட்ப முன்னேற்றத்தை சாதகமான வகையில் முன்னெடுத்துச்செல்வதற்கான திட்டங்களை நாம் வகுத்துள்ளோம். அதேவேளை இந்த சவாலான காலப்பகுதியில் இலங்கையில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சட்டத்தை இலங்கையில் முறையாக அமல்படுத்துவதற்குத் தேவையான ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிமுறைகள் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியல் போன்றவற்றை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும்.

பூர்த்திசெய்யக்கூடியதாக அமைந்தமையானது, நிறுவனமென்றவகையில் அதன் பொறுப்புகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கான முயற்சியாக இது இனங்காணப்படலாம். ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு நாம் எதிர்பார்த்துள்ளதோடு மேலும் பரிசோதனை செயற்பாடுகளில் பங்கேற்பதற்காக புதிதாக உத்தியோகத்தர்களை நியமித்து அவர்களுக்கான பயிற்சிகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் 2022 ஆம் ஆண்டிற்குள் மேலும் பல சிறப்பான திட்டங்கள் செயற்படுத்தப்படுவதற்கு எதிர்ப்பார்க்கப்படுகிறது. மேலும் ஏற்கனவே திறக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் பணிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதனூடாக இலங்கையின் தூய்மையான விளையாட்டுக்கான திறனை கட்டியெழுப்ப முடியுமென்பதோடு சர்வதேச மட்டத்திலான ஆய்வுகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகள் கிட்டும். மேலும் ஊக்குப்பதார்த்தப் பாவனையை முறியடிப்பதில் தன்னம்பிக்கையோடும் உறுதியோடும் விளையாட்டிற்குள் பிரவேசிப்பதன் முக்கியத்துவத்தை சிறுவயதுமுதல் குழந்தைகள் மனதில் ஆழமாகப் பதியச்செய்யும் குறிக்கோளோடு தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் குறித்த தகவல்களை பள்ளிப்பாடவிதானத்தில் உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஒருவருடகாலமாக சிறப்பானதொரு செயற்திறனைக் காண்பிப்பதற்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டு பல்வேறு வழிகளில் உறுதுணையாக இருந்த அனைத்து தரப்பினருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவ்வாறே வரும் ஆண்டிலும் மேலும் முறையான மற்றும் அர்த்தமுள்ள வகையில் தூய்மையான மற்றும் உண்மையான விளையாட்டை கட்டியெழுப்புவதற்கு வழி வகுக்கும் நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கு உயிர்ப்பளிப்பதற்கு அனைவருக்கும் வலிமையும் தைரியமும் கிடைக்க இறைவனைப் பிராத்திக்கின்றேன்.



**பேராசிரியர் அர்ஜுன டி சில்வா**
தலைவர்



# பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச்செய்தி

தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டரங்கில் பேச்சுப்பொருளாகிய 2021 ஆம் ஆண்டில், முழு உலகும் கோவிட்-19 தொற்றுநோய் தொடர்பான சவாலை எதிர்கொள்ளவேண்டியிருந்து. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது 2021 ஆம் ஆண்டில் எட்டாம் ஆண்டு நிறைவைக் குறிப்பதோடு பல மைல்கற்களைக் கடந்த ஆண்டாக இதனைக் குறிப்பிடலாம். போலித்தன்மையற்ற ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது 2021 ஆம் ஆண்டில் எட்டாம் ஆண்டு நிறைவைப் பூர்த்திசெய்யவதோடு பல மைல்கற்களைக் கடந்த ஆண்டாக இவ்வாண்டைக் குறிப்பிடலாம். போலித்தன்மையற்ற விளையாட்டுக்கலாச்சாரத்தை உருவாக்குதல், தடைசெய்யப்பட்ட பொருட்கள் மற்றும் முறைகளை வேரோடு அழித்தல் என்ற கருப்பொருளுடன் செயற்பட்டுவரும் எமது நிறுவனம் ஆண்டு முழுவதும் எம்மைப் பீடித்துள்ள தொற்றுநோய் நிலைக்கு மத்தியில் தனது கடமையை சிறப்பாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பிரதான பணியாகிய தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களுக்கான பரிசோதனைகள் ஆண்டு முழுவதும் சந்தர்ப்பங்களுக்கேற்றவகையில் நடாத்தப்பட்டு வருகின்றது. அதன்படி, 2021 ஆம் ஆண்டில் விளையாட்டு வீர வீராங்கணைகளின் சிறுநீர் மாதிரிகள் பயன்படுத்தப்பட்டு 177 தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இப்பரிசோதனைகள் போட்டியில் ஈடுபடும்போது மற்றும் போட்டிக்கு வெளியே பெறப்படும் சிறுநீர் மாதிரிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டதோடு இவ்வாறான பரிசோதனைகளுக்கு வீர வீராங்கணைகள் தெரிவுசெய்யப்படும்போது “Smart Testing” என்ற முறையை நாம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். 2021 ஆம் ஆண்டு உலகளாவிய தொற்றுநோய் நிலைமையானது அதிகரித்துச்செல்வது அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. இத்தொற்று நிலைமையிலும் 2021 ஆம் ஆண்டில் 29 விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஏற்பாடுசெய்யப்பட்டதோடு 1042 பேர் அவற்றில் பங்கேற்றனர். அவற்றுள் இலக்குப்படுத்தப்பட்ட அணியினராக விளையாட்டு வீர வீராங்கணைகள்இபயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை வீர வீராங்கணைளின் பெற்றோர் உட்பட விளையாட்டு ஆர்வலர்கள் போன்ற பல்வேறு தரப்பினர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு 09 ஆம் திகதி இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்கு ஒரு விசேடமான தினமாகும். அன்றைய தினத்தில் கௌரவ இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச மற்றும் கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு

மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் கௌரவ தேனுக்க விதானகமகே அவர்களால் எமது புதிய ஆய்வுகூடமானது இலங்கை பிரஜைகளின் பயன்பாட்டிற்காக திறந்துவைக்கப்பட்டது. இவ்வைபவத்திற்காக அமைச்சுகளின் செயலாளர்கள் உட்பட பிரதம அதிதிகள் பங்கேற்றனர்.

2021 ஆம் ஆண்டில் நிறுவனத்தில் நிலவிய நிறைவேற்று உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக ஐந்து பதவிவெற்றிடங்களுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டதோடு அதன்மூலமாக மேலும் விரைவான மற்றும் மிகச்சிறந்த வகையில் நிறுவனத்தின் இலக்கை நோக்கி பயணிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியது. 2020 ஆம் ஆண்டில் எம்மால் வடிவமைக்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களை இனங்காண்பதற்கான அன்ரொயிட் செயலியை 2021 ஆம் ஆண்டில் மேலும் புதுப்பிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அச்செயலியை Apple iOS உபகரணங்களில் பயன்படுத்துவதற்கேற்றவகையில் வடிவமைப்பதற்கான அடித்தளமானது இவ்வாண்டில் அமைக்கப்பட்டது.

உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் காலத்திற்குக்காலம் தடைசெய்யப்பட்ட பதார்த்தங்களின் பயன்பாட்டிற்கெதிரான விதிமுறைகள் புதுப்பிக்கப்படுகின்றன. அதற்கமைய 2021 ஆம் ஆண்டுமுதல் அமலாக்கப்படும் வகையில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களுக்கமைவாக இலங்கையிலும் அவ்விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான சட்டநடைமுறைகளை நாம் செயற்படுத்தியுள்ளோம். அதன்போது விசேடமாக தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் மற்றும் முறைகளை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படவேண்டிய பிரதான மற்றும் அத்தியாவசியமானதுமான அம்சமாக "கல்வி" (Education) குறிப்பிடப்பட்டுள்ளது. எமது நிறுவனத்தின் தலையீட்டால் பாடசாலை பாடவிதானத்தில் சேர்ப்பதற்காக விளையாட்டில் பயன்படுத்தக்கூடாத தடைசெய்யப்பட்ட பொருட்களின் பயன்பாட்டைத் தடுத்தல் தொடர்பான பாட சம்பந்தமான விடயங்கள் உள்ளடக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 2022 ஆம் ஆண்டில் 6,8 மற்றும் 10 ஆம் ஆண்டுகளுக்காகவும் 2024 ஆம் ஆண்டில் 7, 9 மற்றும் 11 ஆம் ஆண்டுகளுக்காகவும் இவ்விடயங்களை உள்ளடக்குவதற்கான சந்தர்ப்பம் கிடைத்தமை எமக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும்.

மருந்தாளர்களுக்கும் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளடங்கிய குறைநிரப்பிகளை விற்பனை செய்யும்போது அது தொடர்பான விழிப்புணர்வை வழங்குவதற்கான விசேட நிகழ்ச்சியொன்றும் இவ்வாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதனையும் தொடர்ச்சியாக வரும் ஆண்டுகளிலும் விரிவுபடுத்துவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளது. 2021 ஆம் ஆண்டில் நாம் அடைந்த முன்னேற்றத்தை வரும் ஆண்டுகளில் அதிகரிப்பதற்கு எதிர்ப்பாக்கப்பட்டுள்ளது. அதனூடாக பயன்படதகு போலித்தன்மையற்ற விளையாட்டுக்கான கலாச்சாரத்தை கட்யெழுப்புவதற்கான வாய்ப்பு கிட்டும். 2021 ஆம் ஆண்டில் தாம் அடைந்த அனைத்து வெற்றிகளுக்கும் உறுதுணையாக இருந்த அனைவருக்கும் நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு எதிர்காலத்தில் இலங்கையினுள் போலித்தன்மையற்ற விளையாட்டிற்கான சேவையை வழங்குவதற்கான சக்தி கிடைப்பதற்காக எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்.



**வைத்தியர்.சீவலி ஜயவிக்ரம**

பணிப்பாளர் நாயகம்



# பணிப்பாளர் சபை

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பணிப்பாளர் சபையானது தலைவர் உட்பட பத்து (10) உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.



**பேராசிரியர் அர்ஜுன டி சில்வா - தலைவர்**
(சிரேஷ்ட பேராசிரியர் றாகமை மருத்துவ பீடம், களனிப் பல்கலைக்கழகம்)



**பேராசிரியர் லால் ஜயக்கொடி - உறுப்பினர்**
(தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையகத்தின் முன்னாள் தலைவர்)



**பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ - உறுப்பினர்**
(தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவர்)



**திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய - உறுப்பினர்**
(மேலதிக செயலாளர், திட்டமிடல், கி.பா.வி.உ.மே.இ. அமைச்சு)



**திரு.ஏ.ஜே.எஸ்.எஸ்.எதிரிசூரிய - உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம் - விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம்)



**வைத்தியர் லால் ஏக்கநாயக்க - உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம் - விளையாட்டு வைத்திய நிறுவனம்)



**திரு.சஜித் ஜயலால் - உறுப்பினர்**
(பணிப்பாளர் - விளையாட்டு விஞ்ஞான நிறுவனம்)



**திரு.எஸ்.ஐ.எம்.ரோசா- உறுப்பினர்**
(பணிப்பாளர் - தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களம்)



**வைத்தியர்.அன்வர் ஹம்டானி - உறுப்பினர்**
(பணிப்பாளர் - சுகாதார அமைச்சு)



**வைத்தியர்.நிஹால் முனசிங்க மஹகமகே - உறுப்பினர்**
(விசேட மயக்கவியல் நிபுணர்)

# பணிப்பாளர் குழு அறிக்கை

## பணிப்பாளர் குழுவின் பொறுப்புகள்

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் 15 ஆம் பிரிவின் கீழ் முகவராண்மையின் நோக்கம் சார்ந்த ஒரு விடயம் அல்லது அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் அமைச்சரால் முன்வைக்கப்படும் யாதாயினும் ஒரு விடயம் தொடர்பாகவும் அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதானது பணிப்பாளர் குழுவின் பொறுப்பாகும்.

மேலும் இச்சட்டத்தின் 16 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் அவ்வப்போது எழுத்துப்பூர்வமான விசேட அல்லது பொது கட்டளைகள் வெளியிடப்படுவதோடு பணிப்பாளர் குழுவால் அக்கட்டளையானது நிறைவேற்றப்படவேண்டும்.

## நிர்வாக ரீதியான பங்களிப்பு

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் பிரகாரம் முகவராண்மைச் செயற்பாடுகளின் நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் கட்டுப்பாடானது பணிப்பாளர் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முகவராண்மையின் நிர்வாகச் செயற்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக பணிப்பாளர் குழுவினால்இ இச்சட்டத்தின் மூலமாக முகவராண்மையின் மீது சுமத்தப்பட்ட அல்லது வழங்கப்பட்ட அதிகாரங்கள், செயற்பாடுகள் அல்லது நடைமுறைகளை செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல்இ நிறைவேற்றுதல் அல்லது செயற்படுத்தல்.

## தலைமைத்துவம் சார்ந்த பங்களிப்பு

அதன் தலைமைத்துவம் சார்ந்த பங்களிப்பினுள், பணிப்பாளர் குழுவின் கடமைகளுக்கு கட்டுப்படுத்தல் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கான வழிகாட்டல் உள்ளடக்கப்படவேண்டும்.

- ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிகளை மீறுபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல்.
- எந்தவொரு நடைமுறை அல்லது நிலையான சொத்தொன்றை (விற்பனை செய்வதற்கு, பரிசாக அல்லது பல்வேறு வகைகளில்) கையகப்படுத்துவதற்கு இவைத்திருப்பதற்கு, குத்தகைக்கு விடுவதற்கு, அடமானம் வைப்பதற்குஇஅல்லது பல்வேறு வகையில் அப்புறப்படுத்துவதற்கு.
- ஒரு குறிப்பிட்ட வங்கியில் நடைமுறை மற்றும் சேமிப்புக்கணக்குகளை திறந்து பராமரித்தல்.
- இலங்கைக்கு உள்ளே அல்லது வெளியிலுள்ள நபர்களிடமிருந்து அல்லது அமைப்புகளிடமிருந்து நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளல்.
- முகவராண்மையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்துச்செல்லல் அல்லது அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான சில மற்றும் அனைத்து ஒப்பந்தங்களிலும் ஈடுபடுதல் அல்லது நிறைவேற்றுதல்.

- முகவராண்மைக்குச் சொந்தமான எந்தவொரு பணத்தையும் முதலீடு செய்தல்.
- அதன் செயல்பாட்டை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவைப்படும் எந்தப் பணத்தையும் முறையாகக் கையாளுதல்.
- இச்சட்டத்தின் கீழ் முகவராண்மையின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான அதிகாரிகளை மற்றும் பணியாளர்களை நியமித்தல், பணியமர்த்தல், வழங்குதல் மற்றும் அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் பணிநீக்கம் செய்தல்.
- முகவராண்மையால் வழங்கும் சேவைகள் மற்றும் உதவிகளுக்கான கட்டணங்களை வசூலித்தல்.
- முகவராண்மையின் செயற்திறன்களை நிறைவேற்றுவதற்கான வசதிகளை ஏற்படுத்துவதற்குத் தேவையென உத்தேசிக்கப்படும் அனைத்து விடயங்களையும் செயற்படுத்தல்.

## கூட்டங்கள் மற்றும் பங்கேற்பு

பணிப்பாளர் குழுவானது 2021 ஆம் ஆண்டில் 12 சந்தர்ப்பங்களில் கூடியதோடு பணிப்பாளர் குழுவின் வருகை கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு ஆகும்.

| பெயர் | சனவரி 21 | பெப்ரவரி 18 | மார்ச் 18 | ஏப்ரல் 29 | மே 20 | ஜூன் 17 | ஜூலை 15 | ஆகஸ்ட் 19 | செப்டம்பர் 16 | ஒக்டோபர் 21 | நவம்பர் 25 | டிசம்பர் 21 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பேராசிரியர் அர்ஜுன டி சில்வா | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| பேராசிரியர் லால் ஜயக்கொடி | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | — | ✓ | ✓ | ✓ | ✓ |
| பேராசிரியர் ரவீந்திர பர்ணாண்டோ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரு. டப்ளியூ.ஏ. குலசூரிய | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரு. ஏ.ஜே.எஸ்.எஸ். எதிரிசூரிய | ✓ | — | — | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | — | ✓ |
| வைத்தியர் லால் ஏக்கநாயக்க | — | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரு. சஜித் ஜயலால் | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ | — | ✓ | ✓ | ✓ | ✓ | ✓ |
| திரு. எஸ்.ஜ.எம். ரோசா | ✓ | ✓ | — | — | ✓ | ✓ | ✓ | ✓ | — | ✓ | — | — |
| வைத்தியர். அன்வர் ஹம்டானி | — | ✓ | ✓ | — | — | — | — | — | — | — | ✓ | ✓ |
| வைத்தியர். நிஹால் முனசிங்க மஹகமகே | — | — | — | — | ✓ | ✓ | — | ✓ | — | — | — | — |

# நிறுவன கட்டமைப்பு



தலைவர்
பணிப்பாளர் சபை
பணிப்பாளர்
பணிப்பாளர் (கல்வி மற்றும் பரிசோதனை)
உதவிப் பணிப்பாளர்
கணக்காளர்
ஆராய்ச்சி உத்தியோகத்தர் (03)
தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்
நிர்வாக உத்தியோகத்தர்
சட்ட உத்தியோகத்தர் / பணிப்பாளர் சபை செயலாளர்
பணிப்பாளர் (அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்)
உதவிப் பணிப்பாளர்
மொழி பெயர்ப்பாளர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
அபிவிருத்தி உத்தியோகத்தர்
தொழில்நுட்ப உதவியாளர் (01) (ஆய்வுகூடம்)
தொழில்நுட்ப உதவியாளர் (01)
முகாமைத்துவ உதவியாளர்
முகாமைத்துவ உதவியாளர்
முகாமைத்துவ உதவியாளர்
முகாமைத்துவ உதவியாளர்
சாரதி (04)
அலுவலக உதவியாளர் (03)
HM
MM 1-1
AR-1
JM
MA-4
MA-3
MA 1-1
MA 2-1
PL-3
PL-1

# பணியாளர் குழாம் தொடர்பான விபரங்கள்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்காக 29 பணியாளர்களைக்கொண்ட குழாமுக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| | பதவி | சம்பள அளவீடு | பதவி எண்ணிக்கை | தற்போதைய பணியாளர்களின் எண்ணிக்கை | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் | HM 2-1 | 1 | 1 | |
| 02. | பணிப்பாளர் | HM 1-1 | 2 | | 2 |
| 03. | உதவிப் பணிப்பாளர் /பிரதிப்பணிப்பாளர் | MM 1-1 | 2 | 2 | |
| 04. | கணக்காளர் | MM 1-1 | 1 | 1 | |
| 05. | சட்ட உத்தியோகத்தர் பணிப்பாளர் சபை செயலாளர் | MM 1-1 | 1 | | |
| 06. | ஆராய்ச்சி உத்தியோகத்தர் | AR 1 | 3 | 3 | |
| 07. | நிர்வாக உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | 1 | |
| 08. | தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | JM 1-1 | 1 | 1 | |
| 09. | மொழி பெயர்ப்பாளர் | MA-4 | 1 | 1 | |
| 10. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | MA 3 | 3 | 3 | |
| 11. | முகாமைத்துவ உதவியாளர் | MA 1-1 | 4 | 4 | |
| 12. | தொழில்நுட்ப உதவியாளர் | MA 2-1 | 2 | 1 | 1 |
| 13. | சாரதி | PL 3 | 4 | 2 | 2 |
| 14. | அலுவலக உதவியாளர் | PL 1 | 3 | 2 | 1 |
| **மொத்தம்** | | | **29** | **22** | **7** |



# செயற்பாட்டு முன்னேற்றம்

# கல்வி மற்றும் பரிசோதனைப் பிரிவு

விளையாட்டானது நம் வாழ்க்கைக்கு மிகவும் நெருக்கமானது ஏனெனில் அது உடல்ரீதியாகவும் மனரீதியாகவும் ஆரோக்கியமாக இருப்பதைக் காட்டிலும் ஆன்மீக ரீதியில் ஒழுக்கமான மற்றும் நன்னடத்தைக் கொண்ட ஒரு முழுமையான மனிதனை உருவாக்குவதில் பெரும் பங்களிப்பை வழங்குகின்றது. 25 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பெருமையையும் மாபெரும் வரலாற்றையும் சர்வதேச விளையாட்டுக்கள் மாபெரும் வளர்ச்சியடைந்து மிகவும் சிக்கலான நிலைக்கு உட்பட்டுள்ளது. இது படிப்படியாக நவீனமயமாக்கப்படுவதால் "விளையாட்டு பங்கேற்பு" என்ற நீண்டகால கருத்தாக்கத்தின் முக்கியத்துவமானது படிப்படியாகக் குறைவடைந்து "வெறுமனே வெற்றியை" தொடர்வதற்கான ஒரு திட்டவட்டமான குறிக்கோளையும் ஒருமித்த விருப்பத்தையும் நவீன விளையாட்டுத்துறையில் காணலாம். இன்றைய விளையாட்டானது மிகவும் ஒழுங்கமைக்கப்பட்டு வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியடைந்திருப்பதும் அதிக போட்டித்தன்மையுடையதாகவும் உருப்பெற்றிருக்கின்றமை அத்துறையினுள் விளையாட்டிற்கு நிலவும் வெற்றியடைவதற்கான தாகம் காரணமாகவேயாகும்.

மேலும் விளையாட்டு படிப்படையாக வளர்ச்சிபெற்று அபிவிருத்தியடைந்து போட்டித்தன்மை அதிகரிப்பதால் நவீன மற்றும் மேம்பட்ட தொழிநுட்ப உத்திகள் மற்றும் கருவிகள் நவீன காலப்பகுதியில் இணைக்கப்படும்போது அவற்றை முறையாகச் செயற்படுத்தல், கையாளுதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான பொதுவான விதிமுறைகளின் தேவைப்பாடு மற்றும் முக்கியத்துவமானது வலுவாக முன்னிலைப்படுத்தப்படுகின்றது. இதன் விளைவாகவே விளையாட்டில் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் மற்றும் முறைகளின் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான சட்டவிதிமுறைகள் உள்ளூர் மற்றும் சர்வதேச விளையாட்டுத்துறையில் உள்ளடக்கப்பட்டிருக்கின்றது.


























தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் மற்றும் முறைகளின் பாவனையின் மிக ஆபத்தான விளைவானது அதன்மூலம் மிகத் திறமையான விளையாட்டு வீர வீராங்கணைகளின் முழு விளையாட்டுசார் வாழ்க்கையும் அநியாயமாக இழக்கப்படுகின்றது. அத்துடன் அவர்கள் மூலமாக நாட்டிற்கு கிடைக்கவிருந்த மதிப்புமிக்க சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை அநியாயமாக இழக்கநேரிடுகின்றது. அத்தோடு உலகரங்கில் பிரபலமடையும் இத்தகைய சர்ச்சையான விடயங்கள் காரணமாக நாட்டிற்கு அவமானமும் அபகீர்த்தியும் ஏற்படுகிறது. மறுபுறம் இங்குள்ள மற்றுமொரு நீண்டகால பிரச்சினை யாதெனில் நாட்டின் உயிர்நாடியான எதிர்கால சந்ததியினரின் உடல் மற்றும் மனரீதியான ஆரோக்கியம் மோசமடைந்து நோய்வாய்ப்பட்ட சமூகமானது எதிர்காலத்தில் உருவாவதற்கான சாத்தியக்கூறு அதிகரித்தல் இதில் நீண்டகாலமாக நிலவக்கூடிய மற்றுமொரு பிரச்சினையாகும். எனவே தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பாவனையிலிருந்து விலகியிருப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தி இந்நாட்டு விளையாட்டு சமூகம் மற்றும் அவர்களின் ஆதரவு ஆளணியினர் அனைவருக்கும் இது குறித்த விழிப்புணர்வு வழங்குதல் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை கல்விப் பிரிவி.ன் பிரதான நோக்கமாகும்.

அதன்படி 2021 ஆம் ஆண்டு ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை நடாத்தப்பட்ட தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு. விளையாட்டு வீரர்கள் மற்றும் விளையாட்த்துறையில் ஈடுபாடுடையவர்களை இலக்காகக் கொண்டு இந்நிகழ்ச்சிகள் நாடளாவிய ரீதியில் செயற்படுத்தப்படுகின்றன.



## விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பற்றிய சாராம்சம்

| | இலக்குபடுத்தப்படும் தரப்பினர் | நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | தேசிய விளையாட்டு அணிகள் மற்றும் தேசிய சம்மேளங்கள் | 15 | 399 |
| 02. | ஒலிம்பிக் மற்றும் பராலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீர வீராங்கணைகள் | 1 | 12 |
| 03. | கனிஷ்ட தேசிய குழாம் | 2 | 41 |
| 04. | பாடசாலை விளையாட்டு அணிகள் மற்றும் விளையாட்டுக் கழகங்கள் | 5 | 541 |
| 05. | விளையாட்டு கல்வியாளர்கள் மற்றும் உடற்பயிற்சி பயிற்றுனர்கள் | 3 | 197 |
| 06. | விளையாட்டுத்துறை தொடர்பான இளங்கலை பட்டதாரிகள்ய | 2 | 376 |
| 07. | ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவர்கள் | 1 | 8 |

### நிகழ்ச்சிகளில் பங்கேற்பு



முன்னேற்றம் பின்வருமாறு

| மாதம் | இலக்குபடுத்தப்பட்ட பெறுமானம் | | உண்மையான பெறுமானம் | |
|---|---|---|---|---|
| | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்பு | நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை | பங்கேற்பு |
| ஜனவரி | 2 | 96 | 5 | 86 |
| பெப்ரவரி | 4 | 150 | 3 | 70 |
| மார்ச்சு | 2 | 115 | 5 | 213 |
| ஏப்ரல் | 0 | 0 | 0 | 0 |
| மே | 3 | 40 | 0 | 0 |
| ஜூன் | 2 | 120 | 1 | 5 |
| ஜூலை | 3 | 26 | 2 | 23 |
| ஆகஸ்ட் | 6 | 140 | 1 | 20 |
| செப்டம்பர் | 4 | 230 | 5 | 557 |
| ஒக்டோபர் | 5 | 275 | 2 | 53 |
| நவம்பர் | 3 | 75 | 2 | 45 |
| டிசம்பர் | 2 | 97 | 3 | 128 |
| மொத்தம் | **36** | **1364** | **29** | **1072** |



# ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள்

இலங்கையில் ஊக்குப்பதார்த்தப் பாவனையற்ற தூய்மையான விளையாட்டுக்கான சூழலை கட்டியெழுப்புதல் மற்றும் தூய்மையான விளையாட்டு வீர வீராங்கணைகளை பாதுகாத்தல் போன்றவற்றை நோக்காகக்கொண்டு இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையால் நடாத்தப்பட்ட ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் பற்றிய விபரம்.

**விளையாட்டுகளின்படி மானிடர்களுக்கான ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள்**

| வரிசை இலக்கம் | விளையாட்டு | போட்டியில் ஈடுபடும்போதான பரிசோதனைகள் | போட்டிக்கு வெளியேயான பரிசோதனைகள் | மொத்த ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் | ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் |
|---|---|---|---|---|---|
| 01. | ரக்பி | - | 04 | 04 | - |
| 02. | மெய்வல்லுனர் போட்டிகள் | 67 | 06 | 73 | 01 |
| 03. | சைக்கிளோட்டம் | 13 | - | 13 | - |
| 04. | பழுதூக்குதல் | 26 | 13 | 39 | - |
| 05. | கிரிக்கட் | 12 | 09 | 21 | - |
| 06. | பூப்பந்தாட்டம் | - | 01 | 01 | - |
| 07. | வலுதூக்குதல் | 10 | 03 | 13 | 03 |
| 08. | ஜுடோ | - | 01 | 01 | - |
| 09. | துப்பாக்கிச் சுடுதல் | - | 01 | 01 | - |
| 10. | பரா வில்வித்தை | - | 01 | 01 | - |
| 11. | பரா படகோட்டம் | - | 01 | 01 | - |
| 12. | பரா மெய்வல்லுனர் போட்டி | - | 08 | 08 | - |
| 13. | பரா டெனிஸ் | - | 01 | 01 | - |
| | **மொத்தம்** | **128** | **49** | **177** | **04** |

மிருகங்களுக்கான ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள்

| வரிசை இலக்கம் | விளையாட்டு | ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப பரிசோதனைகளின் எண்ணிக்கை | ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் | ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிபடுத்தப்படும் சதவீதங்கள் |
|---|---|---|---|---|
| 01. | குதிரைப் பந்தயம் | 12 | 08 | 66.6% |

2021 - ஊக்குப்பதார்த்தக்கட்டுபாட்டுப் பரிசோதனைகள் மற்றும் ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிபடுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் (மானிடர்கள்-சிறுநீர்)



# சட்டப் பிரிவு

- 2020 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் மற்றும் 2021 ஆம் ஆண்டிற்குள் ஊக்குப்பதார்த்தப் பாவனை உறுதிசெய்யப்பட்ட விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணைகள் மேற்கொள்ளப்படுதல் மற்றும் அவை தொடர்பான இறுதி தீர்ப்புகளை வெளியிடுதல்.
- மேன்முறையீட்டு விசாரணைகளில் தெளிவான இறுதி தீர்ப்புகளை வழங்குவதற்காக மூன்று அல்லது மூன்றுக்கு மேற்பட்ட சுற்று விசாரணைகளை நடாத்துதல். ஆவ்வாறான அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாக்குமூல மற்றும் எழுத்துமூல சமர்ப்பிப்புக்களை வழங்குவதற்கு மற்றும் தேவையான சட்ட உதவிகளைப் பெறுவதற்கான செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.
- மேன்முறையீட்டு மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள் மூலம் வழங்கப்பட்ட தீர்ப்புகளை உரிய சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு முறையாக தெரிவித்தல்.
- மேன்முறையீட்டு மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளை இணையத்தளவழியாக உரியமுறையில் நடாத்துதல்.
- ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதிமுறைகளை மும்மொழிகளிலும் தயாரித்து அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- 2022 - தடைசெய்யப்பட்ட பொருட்பட்டியலுக்கான பாராளுமன்ற அனுமதியைப் பெறுவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- குதிரையேற்றம் மற்றும் குதிரைப்பந்தய போட்டிகளுக்கான தடைசெய்யப்பட்ட பட்டியலைத் தயாரிப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- பணிப்பாளர் குழுக் கூட்டங்களை பாரம்பரிய முறையைத் தவிர்த்து இணையத்தள தொழிநுட்பத்தினூடாக புதிய பரிமாணத்தில் நடாத்துதல்.

# அமலாக்க மற்றும் செயற்படுத்தல் பிரிவு

அமலாக்க மற்றும் செயற்படுத்தல் பிரிவானது 2021 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இப் பிரிவால் தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்களின் இறக்குமதி, விநியோகம் மற்றும் பாவனையை தடுத்தல் போன்றவற்றில் இப்பிரிவு கவனஞ் செலுத்துகின்றது. 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பாவனைக்கெதிரான சமவாயச்சட்டம் அதன் சட்டவிதிமுறைகள் மற்றும் நாட்டிலுள்ள அதனோடு தொடர்புடைய நிறுவனங்களோடு இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சி நிகழ்வுகளை ஏற்பாடு செய்வதன் மூலம் தூய்மையான விளையாட்டை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

| இல | திகதி | இடம் | கருத்தரங்கு | இலக்குபடுத்தப்பட்ட அணியினர் | பங்கேற்பு |
|---|---|---|---|---|---|
| 01. | 2021/11/03 | இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை | மருந்தாளர்கள் மற்றும் மருந்தக உரிமையாளர்கள் சங்க நிர்வாகிகளுக்கான விழிப்புணர்வு தொடர்பான கலந்துரையாடல் நிகழ்வு | மருந்தாளர்கள் மற்றும் மருந்தக உரிமையாளர்கள் | 06 |
| 02. | 2021/12/14 | பம்பலப்பிட்டி காவல்துறை சார் படைத் தலைமையகம் | 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பாவனைகெதிரான சமவாயச்சட்டம் பற்றிய விழிப்புணர்வை காவல்துறை அதிகாரிகளுக்கு வழங்குவதற்கான கருத்தரங்கு | காவல்துறை அதிகாரிகள் | 92 |

6 வது இராணுவ அஞ்சலோட்டப்போட்டி மற்றும் 57 ஆவது இராணுவ மெய்வல்லுனர் போட்டிகளோடு இணைந்து தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தம் மற்றும் முறைகளின் பாவனை தொடர்பான விசேட புகார் மனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான அத்துடன் விழிப்புணர்வை வழங்குவதற்கான அரங்கொன்றை (Outreach Booth) நிறுவுவதனூடாக அதில் பங்கேற்பவர்களுக்கான விழிப்புணர்வை வழங்குதல் 2021/11/22 முதல் 2021/11/26 வரை சுகததாச விளையாட்டரங்கில் இடம்பெற்றது.





# விசேட முறைப்பாடுகள் பிரிவு

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பாவனைகெதிரான சமவாயச்சட்டத்தின் பிரகாரம் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் அமலாக்க மற்றும் செயற்படுத்தல் பிரிவின் விசேட முறைப்பாடுகள் பிரிவானது 2021 ஒக்டோபர் மாதம் நிறுவப்பட்டது.

அதன்படி முறைப்பாடுகள் பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்படும்

- **இணையத்தளவழியாக**

  அனைத்து விளையாட்டுக்கழகங்களுக்காகவும் “வட்ஸ்செப்” ஊடாக முறைப்பாடுகளுக்கான படிவம் அனுப்பிவைக்கப்படும். ***sladainqiry@gmail.com*** மின்னஞ்சல் முகவரியினூடாகவும் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

- **நேரடியாக**

  போட்டியின்போது முறைப்பாடுகளைப் பதிவுசெய்வதற்கான விசேடமான பெட்டியை பயன்படுத்துவதன் மூலம்.

- உள்வரும் அழைப்புகளுக்கான இணைப்புகளை ஏற்படுத்துவதற்காகவும் அவ்வழைப்புகள் சார்பாக தரமான சேவையினை வழங்குவதற்காகவும் அச்செயற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்காகவும் 070-4220422 என்ற தொலைபேசி இலக்கம் எமது பிரிவுக்காக விசேடமாக பெறப்பட்டுள்ளது.

**விசேட முறைப்பாடுகள் பிரிவுக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் தொடர்பான விபரம்**

| இல | திகதி | முறைப்பாடு | எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|
| 01. | 2021/12/11 | 2021.12.11 அன்று போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பாக இரண்டு விளையாட்டு வீரர்களுக்கு தடைசெய்யப்பட்ட ஊக்குப் பதார்த்தம் என சந்தேகிக்கக்கூடிய ஊசிமருந்து செலுத்தப்பட்டமை. | இவ் விளையாட்டு வீரர்கள் போட்டிக்கு வெளியேயான சோதனைக்குட்படுத்தப்பட்டமை |
| 02. | 2021/12/16 | தடைசெய்யப்பட்ட ஊக்குப் பதார்த்தப் பாவனையில் ஈடுபட்டமைக்காக குற்றஞ்சாட்டப்பட்ட விளையாட்டு வீரர்கள் அரச பாடசாலைகளில் பயிற்றுவிப்பாளர்களாக செயல்பட்டு வருகின்றமை. | முறைப்பாட்டின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டது |




## இலங்கையில் தூய்மையான விளையாட்டுக்கான சூழலை கட்டியெழுப்புவதில் ஒரு அங்கமாக இருங்கள்.

2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான செயற்பாடுகளை திட்டமிடல் , ஒருங்கிணைத்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பான பணிகளை நாம் முன்னெடுத்துவருகிறோம்.

## விசேட முறைப்பாடுகள் பிரிவு

தடைசெய்யப்பட்ட பதார்த்தங்கள் அல்லது முறைகள் தொடர்பாக உங்களுக்கு ஏதேனும் முறைப்பாடுகள் இருப்பின் அவை தொடர்பாக பின்வரும் முறைகள் மூலம் எமக்கு தெரியப்படுத்துங்கள்.

- இணையத்தளம் - *www.slantidoping.org*
- மின்னஞ்சல் முகவரி - *sladainquiry@gmail.com*
- தொலைபேசி இல - *(070) 422 0 422*

அனைத்து சந்தர்ப்பங்களிலும் தகவல் தொடர்பான இரகசியத்தன்மையானது பேணப்படும்.

# ஆராய்ச்சிப் பிரிவு

ஆராய்ச்சிப் பிரிவு நடாத்திய இரண்டு ஆராய்ச்சிகளின் முழுமையான ஆய்வறிக்கைகள், ஆராய்ச்சிப் பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டன.

01. இலங்கை விளையாட்டு வீரர்களின் உணவுக்குறைநிரப்பிகளின் பயன்பாடு அவை குறித்த அறிவு மற்றும் உணவுக்குறைநிரப்பிகளின் பயன்பாட்டுப் பழக்கவழக்கங்கள் பற்றிய ஆய்வு குறித்த முழுமையான அறிக்கை சர்வதேச ஆய்வு பத்திரிக்கையான (Journal of Exercise and Nutrition) என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

02. அரிஷ்ட வகைகளில் தடைசெய்யப்பட்ட ஊக்குப் பதார்த்தங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதற்கான ஆய்வு குறித்த முழுமையான அறிக்கை "Ceylon medical journal" என்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

JEN Journal of Exercise and Nutrition

*2021, Volume 4 (Issue 3): 14* *OPEN ACCESS*

## Dietary Supplement Usage, Associated Knowledge and Attitudes of Sri Lankan National-Level Athletes: A Cross Sectional Study

*Original Research*

Rashani SAN[1*] ORCID, Pigera S[1], Fernando PNJ[1], Niriella MA[2], Jayawickreme SJ[1], De Silva AP[1,2]

[1]*Sri Lanka Anti-Doping Agency, No.363/12, Sugathadasa Stadium- Block D, Stadium Parking road, Sirimavo Bandaranaike Mawatha, Colombo 14, Sri Lanka.*
[2]*Faculty of Medicine, University of Kelaniya, Dalugama, Kelaniya, Sri Lanka.*

**Abstract**
**Purpose**: This study aimed to identify dietary supplement prevalence, reasons to use, supplement types, personal beliefs, knowledge and practices of athletes related to supplement use and doping in sports.
**Methods**: Data was collected from 386 athletes (Male; 66.8%, Female; 33.2%, Mean age ±SD; 26.22±4.9), represented national pools of 12 sport types.
**Results**: 354 (91.5%) of athletes used supplements including multivitamin (57%), electrolyte (49.7%), protein (43.5%), calcium (19.7%) and creatine (17.4%). Gender, social status, education and profession were not found to be determinants of supplement use, but sport type did ($p < 0.05$). Rugby and weightlifting players showed significant protein, multivitamin and creatine use per day ($p < 0.05$). Many athletes consumed supplements to boost their performance (41.8%) and strength (54. 5%). The majority (60.5%) claimed about self-decided supplementation plan. Male athletes had more dope-positive attitudes than females ($P<0.05$). Athletes who attended anti-doping educational workshops/were exposed to international competitions were more concerned about supplement content ($p <0.05$). A considerable number of multivitamin (51.8%), creatine (37.3%) and protein (14.8%) users consumed them without any scientific basis.
**Conclusions**: Dietary supplements appear to be widely consumed by Sri Lankan national-level athletes, whereas a considerable proportion does not follow proper nutritional assessment before use.

***Key Words***: Anti-Doping, Practices, Multivitamin

*Published July 13, 2021*

Corresponding Author: S.A.N. Rashani, meshani1nisha@gmail.com

Original article

# Screening for performance enhancing substances and quantification of ethanol in different arishta manufactured in Sri Lanka

**Punchividanelage Nilu Jayashika Fernando[1], Shehani Pigera[1], Suraweera Arachchilage Nimesha Rashani[1], Ravindra Fernando[2,4], Pabasara Weerasinghe[2], Tharaka Deepal Godakumbura[2], Madunil Anuk Niriella[3], Seevali Jayawickreme[1], Arjuna Priyadarshana de Silva[1,3]**

## Abstract

*Background* Arishta have been used in ayurveda medicine for over thousands of years in Sri Lanka to treat various diseases. Ashwagandharishta, Balarishta and Dashamoolarishta are usually prescribed to obtain an anabolic effect, and Ashwagandharishta and Dashamoolarishta for androgenic effect in males. Thus, these arishta have shown similar effects as anabolic androgenic steroids and stimulants in western medicine. Therefore, arishta could potentially be used by athletes to improve their performance in sports leading to unintentional doping. Additionally, ethanol develops in-source during arista fermentation, which can affect athletes health.

*Objective* The aim of this study was to investigate whether the anabolic androgenic steroids or stimulants banned by World Anti-Doping Agency (WADA) were present in these arishta, and to determined their ethanol content.

*Methods* Methanol extractions of Ashwagandarishta, Balarishta and Dashamoolarishta from four different manufacturers were screened for 21 stimulants and 22 anabolic androgenic steroids banned by WADA, using Gas Chromatography Mass Spectrometer (GC/MS). Ethanol content of the twelve arishta samples were also measured.

*Results* Anabolic androgenic steroids or stimulants were not present in the tested arishta samples, and percentage volume by volume (v/v) ethanol content of all arishta samples were between (5.80-8.35) ±0.5.

*Conclusion* The tested brands of Ashwagandharishta, Balarishta and Dashamoolarishta did not contain stimulants or anabolic androgenic steroids banned by WADA.

*Ceylon Medical Journal* 2020; **65:** 112-117

DOI: http://doi.org/10.4038/cmj.v65i4.9282

## Introduction

Athletes around the world use different techniques to win medals. Among them, commercially available supplements, ayurvedic medications, traditional remedies, and designer drugs are very popular. WADA operates with the aim of bringing consistency to anti-doping policies and regulations within sport organizations and governments across the world [1]. They publish annually a list of substances prohibited for use by athletes, considering that they may artificially increase an athlete's performance [1]. In Sri Lanka, the ayurveda medicinal system has been well established for thousands of years and has been successfully treating various diseases. According to the ayurveda, the human body consists of three dosa (parts) that is watha, pitha, sema. Watha refers to the energy generated by vibration and movement [2]. In western medicine this is referred to as boosting body strength, which is done by stimulants and anabolic androgenic steroids [2]. In ayurvedic practice, watha diseases are treated by Ashwagandarishta, Balarishta and Dashamoolarishta [3]. In addition to that Dashamoolarishta is prescribed for improving sperm count in males [3], similar to the use of anabolic androgenic steroids in western medicinal practice [2]. These three arishta are available in ayurvedic drug stores as over-the-counter medications. Therefore, sportsmen and sports women are able to consume these arishta in Sri Lanka in order to enhance their performance, or as a form of treatment. Arishta is produced by fermentation. Thus, the exact chemical composition of these fermented products is not known by the user. The ingredients of all these three arishta are given by the name of the plant material [3]. Athletes who use these arishta would be yielded a positive result in a urine test due to the consumption of these arishta. This unintentional or intentional doping might lead to the

[1]*Sri Lanka Anti-Doping Agency, Colombo, Sri Lanka,* [2]*The National Narcotics Laboratory, National Dangerous Drugs Control Board, Rajagiriya, Sri Lanka,* [3]*Faculty of Medicine, University of Kelaniya, Dalugama, Kelaniya, Sri Lanka,* [4]*Sir John Kotelawala Defence University, Ratmalana, Sri Lanka.*

Correspondence: NF, *e-mail: <nilujayashika@gmail.com>.* *Received 21 August 2019 and revised version 12 August 2020 accepted 02 December 2020.*

This is an open-access article distributed under the terms of the Creative Commons Attribution License, which permits unrestricted use, distribution, and reproduction in any medium, provided the original author and source are credited.

இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட இரண்டு ஆய்வுகள் SLADA நிறுவனத்தினால் நடாத்தப்படும் ஊக்குப்பதார்த்தங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மதிப்பீடு செய்வது தொடர்பான ஆய்வு மற்றும் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான விதி மீறல் தொடர்பான ஆய்வு ஆகியவை இரண்டும் நிறைவுசெய்யப்பட்டன.






ஆராய்ச்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கண்டுபிடிப்புகள் சாரந்த தகவல்களை விளையாட்டு சமூகத்தினரிடையே விநியோகிப்பதற்கு பல்வேறு வழிகளில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்கிடையில் விஞ்ஞானரீதியான கட்டுரைகள், விளையாட்டு மற்றும் உடல் ஆரோக்கியம் தொடர்பான ஆராய்ச்சிப் பிரிவுகள் காணப்படும் தேசிய பல்கலைக்கழக நூலகங்கள் மற்றும் அவ் ஆராய்ச்சிப் பிரிவுகளுக்கு விநியோகிக்கப்பட்டன. YouTube, Facebook மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் இணையத்தளம் போன்றவற்றினூடாக தேசியமட்டத்தில் இத்தகவலகள் பகிரப்பட்டன. மேலும் விளையாட்டுத்துறைசார்ந்த வைத்தியர்கள், போசணையியலாளர்கள் போன்ற பல்வேறு விளையாட்டுத்துறை தொடர்பான தொழிலைச்சார்ந்தவர்களிடையேயும் விஞ்ஞான ஆய்வுக்கட்டுரைகள் ஒன்றிணைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட புத்தகத்தின் வாயிலாவும் இத்தகவல்கள் பகிரப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன.



## හෙළ ආයුර්වේද පාන වර්ග හා ශ්‍රී ලාංකීය ක්‍රීඩාව

ශරීර ශක්තිය හා ජවය වර්ධනය කිරීමට හෙළ ආයුර්වේද ක්‍රමයට සැකසූ අශ්වගන්ධාරිෂ්ටය, බාලාරිශ්ටය සහ දශමූලාරිෂ්ටය වැනි අරිෂ්ට වර්ග භාවිත කිරීමට අතීතයේ සිටම ශ්‍රී ලාංකිකයන් පුරුදුව සිටියි. මෙම අරිෂ්ට වර්ග වල ක්‍රීඩාවේදී භාවිතයට තහනම් කරන ලද ද්‍රව්‍ය අඩංගු වී ඇතිදැයි සෙවීමට කළ පර්යේෂණයේ ප්‍රතිඵල මෙසේය.

- මෙම පර්යේෂණයේදී ක්‍රීඩාවේ තහනම් කරන ලද ස්ටෙරොයිඩ් වර්ග 22 ක් ද උත්තේජක වර්ග 21 ක් ද මෙම අරිෂ්ට තුල අන්තර්ගත නොවන බව තහවුරු විය.
- මෙම අරිෂ්ට වර්ග තුල එතනෝල මද්‍යසාර සැලකිය යුතු ප්‍රතිශතයක් පවතින බව (5.8 - 8.3) ± 0.5 (v/v) පර්යේෂණයෙන් පෙනී ගියේය.

තවද,මිනිස් සිරුර තුලදී තහනම් කළ උත්තේජයක් හෝ ස්ටෙරොයිඩයක් බවට පරිවර්තනය වීමට හැකියාවක් ඇති පූර්ව රසායනික සංඝටක මෙම අරිෂ්ට තුල අඩංගු දැයි ඉදිරියේදී පරීක්ෂා කර බැලීමට නියමිතය.



antidopingagency

SLAntiDoping

Sri Lanka Anti-Doping Agency

මේ පිළිබඳ වැඩි දුර තොරතුරු ලබා ගැනීමට පිවිසෙන්න

Journal of Exercise and Nutrition Vol. 4 No. 3 (2021)

Ceylon Medical Journal Vol. 65, No. 4, December 2020

Sri Lanka Medical Association, 133rd Anniversary International Medical Congress. Abstract book 2020;27-28




363/12,
Sugathadasa Stadium(Block D),
Stadium Parking Road,
Sirimavo Bandaranaike Mawatha,
Colombo 14


## පිරිසිදු ක්‍රීඩාවක්

ශ්‍රී ලංකාව තුළ බිහිකිරීමට
නව පර්යේෂණ දැනුම යොදා ගනිමු...

නිවැරදි ආහාර රටාවක්,
නිරෝගි ක්‍රීඩා ප්‍රජාවක් බිහි
කිරීමට මෙන්ම
ජාත්‍යන්තර ජයග්‍රහණය
වැඩි කිරීමටද
සවියක් ලබා දෙයි

ග්‍රාමීය හා පාසල් ක්‍රීඩා යටිතල පහසුකම් ප්‍රවර්ධන රාජ්‍ය අමාත්‍යාංශය


ශ්‍රී ලංකා උත්තේජක මර්දන නියෝජ්‍යායතනය

වෙබ් www.slantidoping.org
දුරකථන 0112328366
ඊ-මේල් sladasl@yahoo.com


## 01 ආහාර අතිරේක කෙරෙහි ශ්‍රී ලාංකීය ක්‍රීඩක ක්‍රීඩිකාවන්ගේ ආකර්ෂණය.

ශ්‍රී ලාංකීය ක්‍රීඩක ක්‍රීඩිකාවන් ආහාර අතිරේක භාවිතය කෙරෙහි ඇති නැඹුරුතාවය සෙවීමට කල පර්යේෂණයේ ප්‍රතිඵල මෙසේය.

- මල්ටි විටමින් (57%), ඉලෙක්ට්‍රොලයිට් බීම වර්ග (49.7%), ප්‍රෝටීන (43.5%), කැල්සියම් (19.7%) සහ ක්‍රියැටින් (17.4%) අඩංගු ආහාර අතිරේක වර්ග එවා අතරින් ප්‍රධාන තැනක් ගනී.
- ක්‍රීඩාව අනුව ආහාර අතිරේක භාවිතයේ පැහැදිලි වෙනසක් පෙන්නුම් කරන ලදී.
- බොහෝ ක්‍රීඩක ක්‍රීඩිකාවන් දිනකට ආහාර අතිරේක 3ක් එකවර භාවිත කරනු ලබයි.එය ප්‍රතිශතයක් ලෙස (56.8%) කි. ඒවා ප්‍රෝටීන මල්ටිවිටමින් හා ක්‍රියැටින් අඩංගු ආහාර අතිරේක වේ.
- වයස අවුරුදු 25-31 ත් අතර ක්‍රීඩක ක්‍රීඩිකාවන් බහුල ලෙස ආහාර අතිරේක පරිභෝජනය කරයි.
- ක්‍රීඩිකාවන්ට සාපේක්ෂව ක්‍රීඩකයින් ආහාර අතිරේක කෙරෙහි වැඩි ආකර්ශනයක් පෙන්නුම් කරයි.

මෙම ප්‍රතිඵල වලට අනුව පෙනී යන්නේ, වර්තමානයේ ශ්‍රී ලාංකීය ක්‍රීඩක ක්‍රීඩිකාවන් බහුල ලෙස ආහාර අතිරේක භාවිතය කෙරෙහි නැඹුරු වී ඇති බවයි.



## 02 තහනම් උත්තේජක පිළිබඳ ශ්‍රී ලාංකික ක්‍රීඩකයාගේ දැනුම

ශ්‍රී ලංකාවේ ජාතික තලයේ ක්‍රීඩක ක්‍රීඩිකාවන්ගේ තහනම් උත්තේජක පිළිබඳ දැනුම, ආකල්ප සහ විශ්වාසයන් පිළිබඳව පරීක්ෂා කිරීමට කරන ලද පර්යේෂණයේ ප්‍රතිඵල මෙසේය.

ක්‍රීඩක ක්‍රීඩිකාවන් අතරින් 91.3% ක්‍රීඩාවේ තහනම් උත්තේජක පිළිබඳ දැනුම ඇති අතර එයින් වැඩි ප්‍රතිශතයක් ජාත්‍යන්තර මට්ටමේ තරග කළ පිරිසය.

මෙම ක්‍රීඩික ක්‍රීඩිකාවන් අතරින් 92.7% ක් ආහාර අතිරේක යහපත් සෞඛ්‍ය පවත්වාගෙන යාම සඳහා අවශ්‍ය බවටද 74.6% ජයග්‍රහණයන් සඳහා අවශ්‍ය බවටද විශ්වාස කරති.

- ආහාර අතිරේක මත විශ්වාසයක් දක්වනු ලබන්නේ පුරුෂ පාර්ශවයයි.
- ක්‍රීඩකයින් 76.2% ක් ආහාර අතිරේකයක් භාවිතයට පෙර එම ලේබල පරීක්ෂා කරන අතර පෝෂණ වැඩමුලු සඳහා සහභාගි වී ඇති අය මේ සඳහා වැඩි නැඹුරුතාවයක් දක්වන බව පෙනේ.
- මෙම වැඩමුලු සඳහා සහභාගි වු අය අසනීපයකදී ප්‍රතිකාර ලබන විට තමන් ක්‍රීඩකයෙක් බව දන්වා සිටීම සිදු කරන බව අනාවරණය විය.
- තවද ආහාර අතිරේක පරිභෝජනය කරන්නන් අතරින් 41.8% ක් තමන්ගේ ක්‍රියාශීලිබව වැඩි කිරීමට ආහාර අතිරේක භාවිතා කරන අතර 54% ක් නැතිවූ ශක්තිය නැවත ලබා ගැනීම උදෙසා ඒවා භාවිතා කරයි. අනෙකුත් පිරිසට ඒ පිළිබඳ කිසිදු පැහැදිලි අවබෝධයක් හෝ පරමාර්ථයක් නොතිබුණි.

මේවා භාවිත කරනු ලබන අයගෙන් 60.5% ක් ඒවා තමන්ගේ ස්ව කැමැත්තට භාවිතා කරන අතර ඒ සඳහා පුහුණුකරුවන්,වෛද්‍යවරුන් හෝ වෙනත් අයගේ උපදෙස් ලබාගෙන නොමැත.

මෙහි නිගමනය වන්නේ තහනම් උත්තේජක වැඩමුලු පෝෂණ වැඩමුලු වලට ක්‍රීඩක ක්‍රීඩිකාවන් සම්බන්ධ වුවද ඔවුන් ඒවා ප්‍රායෝගික ලෙස ක්‍රීඩා ජිවිතයට එකතු කරගත යුතු අතර ඔවුන්ගේ ආහාර අතිරේක සම්බන්ධ පුරුදු සහ ආකල්ප තවදුරටටත් දියුණු විය යුතු බවයි.

## 03 ආහාර අතිරේක භාවිතා කරන ඔබ මේ පිළිබදව දැනුවත් ද?

ප්‍රෝටිනමය ආහාර අතිරේකයක් ,මල්ටි විටමිනයක් හා ඉලෙක්ට්‍රොලයිට පානයක් දෛනික ආහාර වලට අමතරව භාවිතා කිරීම ශ්‍රී ලංකික ක්‍රීඩික ක්‍රීඩිකාවන් අතර බහුලව සිදු වෙයි.මෙම බහුවිධ ආහාර අතිරේක භාවිතය නිසා ඔවුන් තුළ වර්ධනය වීමට අවදානමක් ඇති සෞඛ්‍ය ගැටළු හඳුනාගැනීම සඳහා පැවැත්වූ නියමු පර්යේෂණයේ සොයා ගැනීම් මෙසේය.

- බහුවිධ ආහාර අතිරේක භාවිත කරන ක්‍රීඩකයින් මෙන්ම ක්‍රීඩිකාවන් ද අතර රුධිර ගත කොලෙස්ටරෝල් වැඩි වීමේ ඉහළ අවදානමක් පවතී.
- බහුවිධ ආහාර අතිරේක භාවිත කරන ක්‍රීඩකයින්ගේ දේහ බර නිසි ප්‍රමාණයට වඩා වර්ධනය වීමේ ඉහළ අවදානමක් පවතී.
- මෙම තත්වයන් ආහාර අතිරේක භාවිත කරන කාලය හා නියුතු ක්‍රීඩාවේ ස්වභාවය මත වෙනස් විණි.
- ක්‍රීඩක ක්‍රීඩිකාවන් තමන්ට ආහාර වලින් ලැබෙන පෝෂක ප්‍රමාණය පිළිබඳ නිසි තක්සේරුවක් නොමැතිව ආහාර අතිරේක භාවිතයට පෙළඹී සිටියි.

උක්ත කරුණු සැලකිල්ලට ගනිමින් ආහාර අතිරේක භාවිත කිරීමේදී නිසි වෛද්‍ය හෝ පෝෂණවේදියකුගේ උපදෙස් ලබා ගත යුතු අතර මස 6 කට වරක් වත් රුධිර ගත මේද ප්‍රමාණය පරීක්ෂා කර ගත යුතුය.



மேலும், நிறைவுசெய்யப்பட்ட இரண்டு ஆய்வு அறிக்கைகளை வெளியிடுவதற்காக அவை சர்வதேச விஞ்ஞான ஆய்வுகளுக்கான இதழுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

01. விளையாட்டு வீர வீராங்கணைகளால் புரதம், விற்றமின் மற்றும் இலெக்ரோலைட்டுக்கள் போன்ற உணவுக்குறைநிரப்பிகளைப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய உடநலக்குறைபாடுகள் பற்றிய முழுமையான ஆய்வு அறிக்கை.

02. தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தங்கள் தொடர்பான ஆராய்ச்சிகளுக்காக பயன்படுத்தப்படும் பல்வேறு உயிரியல் மாதிரிகள் பற்றிய ஆய்வு அறிக்கை.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் புதிய ஆய்வுகூடமானது 2021 ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதி வைபவரீதியாக திறந்துவைக்கப்பட்டது. இவ் ஆய்வுகூடமானது நவீன தொழிநுட்ப உபகரணங்களைக் கொண்டுள்ளது.







# தகவல் தொழிநுட்பப் பிரிவு

இலங்கை ஊக்குப்பதார்த்தப்பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது, உலக ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை (WADA) மற்றும் உலகின் ஏனைய நிறுவனங்களோடு வழமையாக தொடர்புகளைப் பேணும் நிறுவனமாகும்.

அதில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைப்பு Anti-Doping Administrative System (ADAMS) என அறியப்படும், WADA வினது தகவல் அமைப்பிற்கு எமது நிறுவனம் சார்ந்த புதுப்பிக்கப்பட்ட தகவல்களை வழங்குதல் (விளையாட்டு வீர வீராங்கனைகளை பதிவுசெய்தல், கணக்கை தயாரித்தல், whereabouts கணக்கை தயாரித்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள், விளையாட்டு வீர வீராங்கனைகளை பயிற்றுவித்தல் மற்றும் ஆதரவு வழங்குதல்), Anti-Doping E-Learning (ADeL) கற்றல் அமைப்பை விளையாட்டு வீர வீராங்கனைகளுக்கு அறிமுகப்படுத்தல், பதிவுசெய்தல் மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை எமது நிறுவனத்தின் கல்விப்பிரிவுக்காக தயார்செய்து வழங்குதல் இப்பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.

அத்துடன் நிறுவனத்தின் அன்றாட சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்வதற்குத் தேவையான தொழிநுட்ப உதவியை வழங்குவதும் பிரதான நோக்கமாகும். எமது நிறுவனம் சார்ந்த தகவல்கள், விசேட செய்திகள் மற்றும் பாட அறிவு போன்ற விடயங்களை Facebook, Twitter, You Tube ஆகிய சமூக ஊடகங்களினூடாகவும் இப்பிரிவினால் வடிவமைக்கப்பட்ட இணையத்தளத்தினூடாகவும் சமுதாயத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நிறுவனத்தின் முன்னேற்றம் குறித்த தகவல்களை அவ்வப்போது பல்வேறு துணை நிறுவனங்களுக்கு வழங்கும்போது, அத்தகவல்களை நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் பெற்று அவற்றை ஒன்றிணைத்து மாதாந்த, காலாண்டிற்கான மற்றும் வருடாந்த அறிக்கைகளை தயாரித்து வழங்குதல் இப்பிரிவினால் செயற்படுத்தப்படுகின்றது.

ஆண்டுதோறும் வெளியிடப்படும் புதிய தடைசெய்யப்பட்ட பொருட்பட்டிலுக்கமைவாக எமது நிறுவனத்தின் தகவல் தொழிநுட்பப் பிரிவினால் வடிவமைக்கபட்ட Android ஸ்மார்ட் தொலைபேசிகளுக்கான Drug Reference App என்ற DRApp இனது தரவு அமைப்பானது புதுப்பிக்கப்பட்டது.

நிறுவனம் சார்ந்த விசேட சந்தர்ப்பங்களில் தேவையான கிராபிக் வடிவமைப்புகள் இப்பிரிவினால் தயாரிக்கப்படுவதோடு இவ்வாண்டு தயாரிக்கப்பட்ட வடிவமைப்புகளின் தொகுப்பானது கீழே தரப்பட்டுள்ளது. புத்தகங்கள் மற்றும் புத்தக அட்டைகள், சமூக ஊடகங்களுக்கான இடுகைகள், துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், காணொளிகள் போன்ற பல வடிவமைப்புகள் இதிலடங்கும்.

நிறுவனத்தால் பராமரிக்கப்படும் Web server பாதுகாப்பு, தரவுத்தள அமைப்பின் முகாமைத்துவம், மென்பொருள் முகாமைத்துவம் உள்ளிட்ட தொழிநுட்ப சேவைகளை வழங்குதல் இப்பிரின் பொறுப்பாகும். புதிய மென்பொருட்களை வடிவமைத்தல், மென்பொருள் சார்ந்த சிக்கல்களை சரிசெய்தல் மற்றும் முன்மாதிரிகளை நிறுவுதல் போன்றவை இவற்றுள் அடங்கும்.

இவ்வாண்டில் இரண்டு இணையத்தளம் சார் கருத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதோடு அவை தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறு.

01. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையோடு இணையத்தளவழியாக தொடர்புகொள்வதற்காக அப்பிரிவோடு இணைந்துள்ள விளையாட்டுத்துறை சார்ந்த மருத்துவர்களுடைய தகவல்கள் உள்ளடங்கிய அமைப்பைக்கொண்ட இணைத்தளத்தை வடிவமைத்தல்.

    இது VCLC என்றழைக்கப்படும்.

    தொடர்புகளுக்கு ***https:// slantidoping.org/joinus/*** என்ற இணையத்தள முகவரிக்குள் பிரவேசிக்கவும்




02. தடைசெய்யப்பட்ட ஊக்குப்பதார்த்தப் பயன்பாடு தொடர்பாக முறைப்பாடுகளை செய்வதற்காக எமது நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட முறைகளில் ஒன்றான இணையப்படிவம், தரவுத்தளம் அத்தோடு முறைப்பாடுகளை செயற்படுத்தும் இணையத்தள அமைப்பானது (Admin Dashboard) வடிவமைக்கப்பட்டுள்ளது.

    தொடர்புகளுக்கு ***https://slantidoping.org/Complaint%20Management%20System/***

## Admin Dashboard

புதிதாகப் பெறப்படும் முறைப்பாடுகளை சரிபார்க்கவும், அம்முறைப்பாடுகளின் பேரில் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பதிவுசெய்யவும் தேவைப்படின் அனைத்து சந்தர்ப்பங்களிலும் கடந்தகால தகவல்களை சரிபார்ப்பதற்கும் முறைப்பாடு செய்தவர்கள் பற்றிய விபரங்களைப் பெறுவதற்கும் admin dashboard வழியாக வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.


CMS | Admin
Admin
Manage Complaint
Not Process Yet Complaint 19
Pending Complaint 2
Closed Complaints 0
Manage users
User Login Log
Logout
Admin Change Password
Current Password
Enter your current Password
New Password
Enter your new current Password
Current Password
Enter your new Password again
Submit
© SLADA 2021 CMS All rights reserved.


CMS | Admin
Admin
Manage Complaint
Manage users
User Login Log
Logout
Closed Complaints
Show 10 entries
Search:
Complaint No
complainant Name
Reg Date
Status
Action
1 2021-08-21 05:05:10 Not process yet View Details
2 2021-08-21 05:11:38 Not process yet View Details
3 scs 2021-08-23 02:26:39 Not process yet View Details
5 asa 2021-09-17 01:14:47 Not process yet View Details
6 2021-09-17 02:36:38 Not process yet View Details
7 medha uma 2021-09-17 05:37:24 Not process yet View Details


CMS | Admin
Admin
Manage Complaint
Manage users
User Login Log
Logout
Manage Users
Show 10 entries
Search:
# Name Email Contact no Address Reg. Date
1 2021-08-21 05:05:10
2 2021-08-21 05:11:38
3 scs scs@gma.com 710456321 scs 2021-08-23 02:26:39
4 scs scs@gma.com 710456321 scs 2021-08-23 02:29:01
5 asa aS@SC.CVX 0 asas 2021-09-17 01:14:47

# நிர்வாகப் பிரிவு

2021/12/31 இல் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கை 29 ஆகும். அவர்களுள் 22 பேர் பணியமர்த்தப்பட்டு கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

2021 ஆம் ஆண்டு கீழ்வருமாறு பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டது.

01. உதவிப்பணிப்பாளர்(கல்வி மற்றும் பரிசோதனை)
02. உதவிப்பணிப்பாளர் (அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்)
03. அபிவிருத்தி உத்தியோகத்தர் (02 பதவிகள்)
04. தொழிநுட்ப உதவியாளர் (01 பதவி)

2021 ஆம் ஆண்டில் எமது நிறுவனத்திற்கான தொழிநுட்ப உதவியாளர் (ஆய்வுகூடம்) என்ற பதவி அங்கீகரிக்கப்பட்டது. அதற்கான ஆட்சேர்ப்பு நடைமுறைகள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டில் பொருத்தமான விண்ணப்பதாரர் பணியமர்த்தப்படுவார்.

# நிலைபெறுதகைமை பற்றிய அறிக்கை



“இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது பொறுப்புணர்ச்சியுடன் கூடிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதோடு அதன் நிறுவன நோக்கங்களினூடாக இலங்கை விளையாட்டு வீரர்களுக்கு முறையான நிரந்தரமான மற்றும் நிலைபெறுதகைமைக்கான மதிப்பை உருவாக்குகின்றது.”

கடந்த தசாப்தகாலமாக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது பிரதானமாக நிலைபெறுதகைமையை முன்னெடுத்துச்செல்லும் நிறுவனமாக விளங்குகின்றது. ஆரம்பம் முதலே இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது அதன் நேரடி பங்குதாரர்களின் நலனைக் கருத்திற்கொண்டு விளையாட்டு வீரர்களின் ஒட்டுமொத்த நீண்டகாலத் தேவைகள் மற்றும் ஒழுக்கவியலோடு முரண்படுவதில்லை என்பதை உறுதியாக நம்புகின்றது. குழுவின் நிலைபெறுதகைமை பற்றிய அறிக்கையில் அதன் சுயவிபரம், நிலைபெறுதகைமைக்கான உத்திகள், பொருளாதார ரீதியான பொறுப்பு, சமூக ரீதியான பொறுப்பு மற்றும் சுற்றுச்சூழல் ரீதியான பொறுப்பு போன்றவை அடங்கும்.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது பிரதானமாக நிலைபெறுதகைமையை முன்னெடுத்துச்செல்வதற்காக பொறுப்புடன் கூடிய வளர்ச்சிக்காக அர்ப்பணிப்போடு செயற்பட்டு வருவதோடு அதன் நோக்கங்களை அடைவதன் மூலமாக விளையாட்டு வீரர்களுக்கு முறையே நிரந்தரமான மற்றும் நிலைபெறுதகைமைக்கான மதிப்பை உருவாக்குகின்றது. சமூக், சுற்றாடல் மற்றும் பொருளாதார ரீதியான பொறுப்புகளை முன்னெடுத்துச்செல்வதற்காக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை மேற்கொண்ட நடவடிக்கைகளை இவ்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினது சமூக பொறுப்பிற்கு முகவராண்மையில் விளையாட்டு வீர வீராங்கணைகள் மற்றும் இலங்கைப் பிரஜைகளின் பாதுகாப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட பொறுப்புமிக்க நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுற்றாடல் ரீதியான பொறுப்பை நிறைவேற்றுவதற்காக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையினது செயற்பாடுகளின் சுற்றாடல் ரீதியான தாக்கத்தை கண்காணித்து சுற்றுச்சூழலுக்கு உகந்த முதலீடுகளை செய்கின்றது. பொருளாதார ரீதியான பொறுப்பு என்பது வெளிப்படையான மற்றும் சமநிலையான நிர்வாக கட்டமைப்பாக மாற்றப்படுகின்றது.

## எமது நன்னெறிகள்

எமது நிறுவனத்தைச் சார்ந்த அர்ப்பணிப்புடன் கூடிய மற்றும் ஆர்வம் மிக்க பணியாளர்களைப் பொறுத்தவரை அவர்கள் எமக்கு பாரியளவிலான ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர். ஆகையால் நாமும் அதில் ஒரு அங்கத்தவர் என அவர்கள் பெருமைப்படக்கூடியவாறானதொரு சூழலை உருவாக்குவதற்கு நாம் அரும்பாடுபடுகின்றோம். எமது பணியாளர்களின் திருப்தியைப் பொறுத்தே எமது நிறுவனத்தின் வெற்றி தங்கியுள்ளது என்பதனை நாம் நன்கு புரிந்துகொண்டதால், எமது பணியாளர்களின் சிறப்புத்தன்மையையும் வெற்றியையும் ஊக்குவிப்பதற்காக பயிற்சி மற்றும் தொடர்ச்சியான கல்வி போன்றவற்றிக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதனூடாக எமது பணியாளர்களுக்காக முதலீடு செய்கின்றோம்.

## சுற்றுச்சூழல் சார்ந்த பொறுப்பு

சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் பாதிப்பை குறைப்பதற்காக எம்மால் எடுக்கப்பட்ட முயற்சிகள் வெற்றியடைந்துள்ளன. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை பணியாளர்களுக்கான முழுமையான பயிற்சி, நவீன தொழிநுட்பம் மற்றும் பங்குதாரர்களோடு இணைந்து பணியாற்றல் போன்றவற்றினூடாக பயனுள்ள ஆதரவு சேவையை வழங்குவதற்கான பாதையை வகுக்கின்றது. செயலியின் அறிமுகமானது இதற்கான சான்றாகும். டிஜிட்டல் மயமாக்கல் மூலம் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அதிகளவிலான செயலிகள் மற்றும் இணையத்தள சேவைகளை அறிமுகப்படுத்துவதனூடாக பூமியில் காபன் சுவடுகளை குறைப்பதை இலக்காகக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழல் சார்ந்த தாக்கம்

குறித்த இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்காகவும் பணியாளர்களிடையே பசுமை விழிப்புணர்வை அதிகரிக்கவும் நாம் உத்தேசித்துள்ளோம். இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது நிலைபெறுதகைமைக்கான மதிப்பை நிர்மாணிப்பதனூடாக அர்ப்பணிப்புடன் கூடிய அபிவிருத்தியை நோக்கி கவனஞ்செலுத்தி வருகின்றது. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது, நிறுவனம் சார்ந்த முயற்சிகளின் விளைவாக சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய தாக்கத்தினை கண்காணித்து அதன் சுற்றுச்சூழல் சார்ந்த பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக வலுச்சக்தி சேமிப்பிலும் முதலீடு செய்கின்றது.

## எமது சமூக பொறுப்பு

எமது நிறுவனம் சார் சமூக பொறுப்பு தொடர்பான கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு எம்மை மதிப்புமிக்க சமூகத்தினராக அங்கீகரிப்பதானது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையாகிய எமக்கு அவசியமாகும். அதனால் அர்த்தமுள்ள மற்றும் நீண்டகால கூட்டாண்மை மூலம் விளையாட்டு வீர வீராங்கணைகளுக்கு மற்றும் சமூகத்திற்கு ஒத்துழைப்பை வழங்குவதற்கு மற்றும் சுற்றுச்சூழல் சார்பாக பயன்தரு வகையில் நிறுவன நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை கவனஞ்செலுத்திவருகிறது.

## மனித வளம்

சிறந்த வணிக நடைமுறைகளை மேம்படுத்துவதில், நீடித்த வாடிக்கையாளர் உறவை கட்டியெழுப்புவதில் எமது பணியாளர்களின் முக்கிய பங்களிப்பை நாம் அங்கீகரிக்கின்றோம். நாம் எமது ஊழியர்களுக்கு மிகுந்த மதிப்பளிப்பதோடு அவர்களால் வழங்கப்படும் விலைமதிப்பற்ற பங்களிப்புகளுக்கு எமது பாராட்டுகளை வெளிப்படுத்துவதற்காக நவீனஇகூட்டு மற்றும் கவர்ச்சிகரமான பணியிடத்தை நிர்மாணித்து வழங்கியுள்ளோம்.

## பணியாளர் குழு மேம்பாட்டுக்கான நோக்கங்கள்

- வேலை மற்றும் தொழில் வாய்ப்புகளை உருவாக்கி ஊக்குவித்தல்.
- பணியாளர் குழாமைத் திட்டமிடல் மற்றும் திறன் விருத்திக்கான திட்டங்களை மேம்படுத்தல்இதரமான ஆட்சேர்ப்பு மற்றும் தக்கவைப்புக்கான நடவடிக்கைகள், தலைமைத்துவம் மற்றும் பிரதியீட்டாளர்கள் தொடர்பான திட்டங்களை மேம்படுத்தல் மற்றும் தொடரச்சியாக கல்வியை வழங்குவதனூடான தொடர்ச்சியான அபிவிருத்திசெய்தல்.
- எமது பணியாளர்கள் பலப்படுத்தப்படுவதோடு அவர்களுடைய சாதனைகளுக்கான ஊக்கம் வழங்கப்படுவதையும் உறுதிபடுத்தல்.
- நிறுவனத்தின் மூலோபாய திசை தொடர்பாக எமது பணியாளர்கள் விழிப்புணர்வைப் பெற்றிருப்பதனையும் அது தொடர்பாக அறிந்திருப்பதனையும் உறுதிபடுத்தல்.



# நிறுவன நிர்வாகம்

நிறுவன நிர்வாக அமைப்பானது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் முடிவெடுக்கும் நடைமுறைகளை வரையறுக்கின்றது. அதேவேளை நிறுவனத்தின் நீண்டகால நோக்கங்கள் மற்றும் மூலோபாயத்திட்டங்கள் போன்றவற்றை வழிநடத்துகின்றது. நிறுவன நிர்வாக மாதிரியானது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் பல்வேறு மட்டங்களுக்கிடையிலான, விசேடமாக நிர்வாக மட்டங்களுக்கிடையிலான அதாவது பணிப்பாளர் குழு மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ மட்டங்களுக்கிடையே அதிகாரம் மற்றும் பொறுப்புகளின் பகிர்வை சுருக்கமாகக் கூறுகின்றது. பணிப்பாளர் குழுவானது நிறுவனக்கொள்கையை வகுப்பதோடு தமது நிறுவனத்தின் முறையான செயற்பாட்டிற்கு பொறுப்புக்கூறவேண்டிய நபர்களாகிய பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் ஏனைய நிறைவேற்று அதிகாரிகளுக்கு மூலோபாய வழிகாட்டுதலை வழங்குகிறது.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தினால் நிர்வகிக்கப்படுகின்றது. அச்சட்டத்தின் 14(ை) ஆம் வாசகத்தின் கீழ் பணிப்பாளர் குழுவின் கட்டமைப்பு கீழ்வருமாறு ஆகும்.

(அ) கீழே குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகபூர்வ அதிகாரங்களால் நியமிக்கப்படும் உறுப்பினர்கள்:

i. விளையாட்டுத்துறை சம்பந்தமாக பொறுப்புவகிக்கும் அமைச்சருக்கான அமைச்சின் செயலாளரால் பரிந்துரைக்கப்படும் சிரேஷ்ட உதவிச்செலாளர் பதவிக்குக் குறையாத பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்

ii. விளையாட்டுத்துறை அபிவிருத்தி - பணிப்பாளர்

iii. விளையாட்டு வைத்திய நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம்

iv. தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர்

(ஆ) அமைச்சரால் நியமிக்கப்படுபவர் சட்டம், விளையாட்டுத்துறைசார் மருத்துவம், மற்றும் விளையாட்டு விஞ்ஞானம் ஆகிய துறைகளில் நிபுணத்துவம் பெற்ற (இனிமேல் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என குறிப்பிடப்படும்) ஆறு உறுப்பினர்களைக் கொண்டிருக்கவேண்டும்.

அமைச்சரால் குழுவின் தலைவர் நியமிக்கப்படுவதுடன், குழுவின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தராகவும் தலைவர் செயற்படுவதோடு அவர் குழுவின் செயற்பாடுகள் தொடர்பான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கு பொறுப்புடையவராவார்.

## பணிப்பாளர் குழுவின் கடமைகள்

அரசாங்கக் கொள்கையின் பிரகாரம் நிறுவனத்தின் வினைத்திறனான நிர்வாகத்திற்கு பணிப்பாளர் குழு பொறுப்பாகும். அனைத்து சட்டபூர்வமான மற்றும் முகாமைத்துவ ஒழுங்குமுறைகளின் தேவைப்பாடுகளுக்கிணங்க இது அமையவேண்டியதோடு, வளங்களின் பாதுகாப்பு, போதுமான கணக்குகளை

பேணுதல் மற்றும் துல்லியமான அறிக்கையிடல் ஆகியவற்றை உறுதிசெய்வதன் மூலமாக இது அடையப்படவேண்டும்.

எனவே பணிப்பாளர் குழு பின்வருவனவற்றை உறுதிசெய்யவேண்டும்:

- அமைப்பின் மூலோபாய நோக்கங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை உறுதிசெய்தல்.
- மூலோபாய நோக்கங்களை அடைவதற்கு தலைமைத்துவத்தை வழங்குதல்.
- பயன்தரு உள்ளக கட்டுப்பாடு மற்றும் இடர் முகாமைத்துவ அமைப்பு நடைமுறையில் இருப்பதை உறுதிசெய்தல்.
- நிறுவன முகாமைத்து நடவடிக்கைகளை பயனுள்ள வகையில் கண்காணித்தல்.
- வழமையான அடிப்படையில் தேவைப்படும் நிதிசார் அம்சங்கள் மற்றும் வெளிப்பாடுகள் தொடர்பாக போதுமானளவு அறிக்கையிடல்
- வளங்கள் மற்றும் சொத்துக்களை பொறுப்புடன் பயன்படுத்தல்
- கணக்காய்வுக் குழு மற்றும் பிற குழுக்களை நியமித்தல் மற்றும் நன்னெறிகளின் அமைப்பு மற்றும் நிறுவன நிர்வாக உத்தி போன்றவற்றை அறிமுகப்படுத்தல்
- உரிய கட்டளைகள், வழிகாட்டுதல்கள் மற்றும் சுற்றறிக்கைகள் போன்றவற்றிற்கமைய அவர்களின் அனைத்து செயற்பாடுகளுக்கும் பொறுப்புக்கூறல்
- குறைந்தபட்சம் ஆண்டுக்கு ஒருமுறை அல்லது பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் மற்றும் சிரேஷ்ட நிர்வாக பணியாளர் குழுக்களை மதிப்பீடு செய்தல்.

## பணிப்பாளர் குழுக்கூட்டங்கள்

நிறுவன செயற்பாடுகள் மற்றும் பணிப்பாளர் குழுக்கூட்டங்களின் முடிவுகள் வரவுசெலவுத்திட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட நியமங்களுக்கமைய கண்டிப்புடன் மற்றும் தொடர்ந்து கண்காணித்தல். பணிப்பாளர் குழுவின் கவனம் முழுமையாக தேவைப்படும் ஏனைய விடயங்ளுடன் முறையாக நிகழ்ச்சி நிரலொன்றைப் பின்பற்றல். பணிப்பாளர் குழுவானது மாதம் ஒருமுறை கூடுவதோடு தேவையேற்படும் போது சிறப்பு பணிப்பாளர் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படும்.

## SLADA குழு

01 ஒழுக்காற்றுக் குழு

02. மேன்முறையீட்டுக் குழு

03. நோய் தீர்க்கும் பயன்பாட்டிற்கான விலக்களிப்பு (டீ.யூ.ஈ) குழு

04. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

05. பெறுகைக் குழு

## முகாமைத்துவம்

குழுவின் அன்றாட செயற்பாடுகள் மற்றும் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தருடைய மற்றும் தலைமை முகாமைத்துவக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அபாயங்கள் மற்றும் வாய்ப்புக்கள் அடையாளம் காணப்படுவதையும் உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதையும் இலக்குகளை அடைவதற்கான வரவு செலவுத்திட்டங்கள் தயாரிக்கப்படுவதையும் இக்குழுக்கள் உறுதிசெய்கின்றன.

# இடர் முகாமைத்துவ அறிக்கை

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் செயற்பாடுகளில் பயனுள்ள இடர் முகாமைத்துவம் முக்கியகாரணியாகும். எமது செயற்பாடுகளில் ஆபத்து மற்றும் விளைவுகளுக்கிடையில் உரிய சமநிலையை உருவாக்குவதற்கு மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் எமது வளர்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவதற்கு உதவும் வகையில் இடர் முகாமைத்துவ திறன்களை தொடர்ச்சியாக மேம்படுத்த நாம் முயற்சிக்கின்றோம். இடர் முகாமைத்துவமானது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் செயற்பாட்டுக் கட்டமைப்பின் பிரதான அங்கமாகும். நாம் எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் இடர் மட்டத்தினுள் இடர் வெளிப்பாட்டை நிர்வகிப்பதன் மூலம் வருவாய் மற்றும் மூலதனத்தில் பாதகமான ஏற்ற இறக்கங்களை கட்டுப்படுத்த முயல்கிறோம்.

அபாயங்களை அடையாளங்காணுதல் மற்றும் அவற்றை குறைப்பதற்குப் பொறுப்பான உத்தரவாத அணுகுமுறையானது முகாமைத்துவ அமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இடர் விழிப்புணர்வு நடைமுறைகளை ஆதரிக்கும் மற்றும் அதன்மூலம் இடர் அடிப்படையிலான முடிவெடுப்பதனை ஆதரிக்கும் வலுவான இடர் மேலாண்மை கலாச்சாரத்தை உருவாக்குவதே எமது முதன்மையான கவனஞ்செலுத்தப்படும் காரணியாகும். இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் நீண்டகால நிலைத்தன்மையை உறுதிசெய்வதற்காக எமது இடர் உத்திகளை மேலும் மேம்படுத்துவோம்.

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் இடர் முகாமைத்துவ உத்திகள், விசேட பங்குதாரர்கள்இ முகாமையாளர்கள் மற்றும் பணிப்பாளர் குழுவிற்கான பின்னுட்ட பொறிமுறையாக செயற்படுகிறது. நிறுவனத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள்இசெயற்பாடுகள்இஅமைப்புகள் மற்றும் சேவைகளுக்கான விழிப்புணர்வுடன் கூடிய முடிவெடுப்பதற்கான மூலோபாய மையமாக அதற்குக் கிடைக்கப்பெறும் நிலையானது தனித்துவமானதாகும். இது கீழே குறிப்பிடப்பட்டுள்ள காரணிகளினூடான அணுகுவதற்காக மூலோபாய மற்றும் நிகழ்ச்சித் திட்டமிடல், கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு மற்றும் நிகழ்ச்சித்திட்ட செயற்பாட்டு மட்டங்களுக்கு நிலையான அணுகலை வழங்குகிறது:

- நிகழ்ச்சித்திட்ட செயற்பாடுகள் மற்றும் அலகுகள் முழுவதற்குமான அபாயங்கள் குறித்த பொதுவான விழிப்புணர்வை வழங்குதல்.
- மேம்படுத்தப்பட்ட முன்னுரிமைகளை வகுத்தல் மற்றும் முடிவெடுப்பதற்கு வசதியாக நிர்வாகத்திற்கு தொடர்ச்சியான இடர் மதிப்பீட்டினை வழங்குதல்.
- பணியாளர்களின் விழிப்புணர்வு மற்றும் முகாமைத்துவப் பொறுப்புகளை மேம்படுத்தலின்போது இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட அபாயங்களுக்கு உட்பட்டுள்ளது.

## நிதிசார் இடர்

திறமையற்ற பணப்புழக்க முகாமைத்துவம் மற்றும் நிதித் தகவல் தொடர்பான இடர்கள், நிறுவனத்தின் உற்பத்தித் திறனைக் குறைக்கலாம். இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை முழுதும் செலவுக்கட்டுப்பாட்டு உத்திகளை ஒருங்கிணைத்தல் போன்ற நிதி இடர் முகாமைத்துவ மூலோபாய நடைமுறைகளை பயன்படுத்துகிறது.

## செயற்பாட்டு இடர்

செயற்பாட்டு இடர்களில் கணினி அமைப்புகளில் ஏற்படக்கூடிய கோளாறுகள், தனிநபர்களால் ஏற்படக்கூடிய தவறுகள், குற்றவியல் செயற்பாடுகள் அல்லது உள்ளக அமைப்புகளின் செயலிழப்பு போன்றவை அடங்கும். இத்தகைய சூழ்நிலைகள் நுகர்வோர் நம்பிக்கைக்கு மற்றும் நிறுவனத்தின் நற்பெயருக்கு கலங்கத்தையும் ஏற்படுத்தக்கூடும். செயற்பாட்டு இடர்களை குறைப்பதற்காக, இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது உள்ளகக் கட்டுப்பாடுகளை தொடர்ந்து மேம்படுத்தி வருகின்றது. நிறுவனம் சார் இடர்களால் ஏற்படக்கூடிய ஆபத்துகளை குறைப்பதற்காக இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் முகாமைத்துவத்தினால், செயற்பாட்டு அலகுகள் மற்றும் திட்டச் செயற்பாடுகளின் வழமையான இடர் மதிப்பீடுகளை செய்கின்றது.

## சட்டரீதியான இடர்கள்

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மைக்கு எதிராக எடுக்கப்படும் எதிர்கால சட்டரீதியான நடவடிக்கைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளத் தவறும் பட்சத்தில் சட்டரீதியான பாதிப்புகள் ஏற்படுவதற்கான அபாயம் அதிகரிக்கின்றது. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது அங்கீகாரம் பெற்ற சட்ட வல்லுனர்களின் ஆலோசனையைப் பெற்று, அத்தகைய ஆபத்துகளைக் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

## தகவல் தொழிநுட்ப ரீதியான இடர்கள்

தகவல் தொழிநுட்ப அமைப்பின் மூலம் பெறப்படும் துல்லியமான மற்றும் உரிய காலப்பகுதிக்குரிய தகவல்கள் இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை செயற்பாடுகளின் முக்கிய அங்கமாக விளங்குகின்றது. இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையானது அதன் தகவல் தொழிநுட்ப அமைப்பை மேம்படுத்துவதற்கான செயற்திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.



# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அறிக்கை

2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான எமது அறிக்கையை வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்.

## கணக்காய்வு குழுவின் கட்டமைப்பு

கணக்காய்வுக் குழுவானது கீழ்வரும் நிறைவேற்று அதிகாரமற்ற மூன்று (03) பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது.

01. திரு.எஸ்.ஐ.எம்.ரோசா தலைவர் (பணிப்பாளர், தேசிய வரவுச்செலவுத்திட்ட திணைக்களம்)

02. திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய உறுப்பினர் (மேலதிகச் செயலாளர், கட்டுப்பாட்டு, கி.பா.வி..உ.மே.இ. அமைச்சு)

03. வைத்தியர். லால் ஏக்கநாயக்க உறுப்பினர் (பணிப்பாளர் நாயகம், தே.வி.வைத்திய நிறுவனம்)

இக்கூட்டங்களில் பணிப்பாளர் நாயகம், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்துகொள்ளவேண்டியது கட்டாயமாகும். கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு உத்தியோகத்தர், திரு.எச்.ஜுட் பெரேரா, கிராமிய மற்றும் பாடசாலை விளையாட்டு உட்கட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் முதன்மை உள்ளக கணக்காய்வாளர மற்றும் திருமதி.டீ.எச். கலங்சூரிய இக்குழுவின் பார்வையாளர்களாக கூட்டங்களில் கலந்துகொள்வர்.

## கணக்காய்வு குழுவின் பொறுப்புகள்

தூய்மையான விளையாட்டை நிறுவுதல் மற்றும் நிறுவனத்தின் சொத்துக்களைப் பாதுகாத்தல் போன்றவற்றுக்கு வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு அமைப்பானது நடைமுறைப்படுத்தப்படவேண்டும். நிதியமைச்சு மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் வழங்கப்பட்ட வழிகாட்டுதல்களும் இக்குழுவால் பின்பற்றப்படுகின்றது. 2021 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்குள் கணக்காய்வு குழுவால் அதன் பிரதான பொறுப்புகள் தொடர்பாக மேற்கொண்ட செயற்பாடுகளின் சுருக்கம் பின்வருமாறு.

01. உள்ளக கணக்காய்வாளரால் அங்கீகரிக்கப்பட்ட வருடாந்த கணக்காய்வுத் திட்டத்தின்படி அவ்வப்போது மேற்கொள்ளப்படும் உள்ளகக் கணக்காய்வு தொடர்பான குறிப்பிட்ட காலப்பகுதிக்கான கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவேண்டும். இவ் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் நடைமுறையிலுள்ள அமைப்புகள் மற்றும் நடைமுறைகளில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டுவதோடு, பரிந்துரைகளை செயற்படுத்துவது பற்றி கலந்தாலோசித்த பின்னர், தேவையான சந்தர்ப்பங்களில் தற்போதுள்ள முறைகள் மற்றும் நடைமுறைகளின் மேம்பாடுகளைப் பரிந்துரைத்து முகாமைத்துவம் மற்றும் கணக்காய்வுக் குழுவிற்கு அவற்றின் முன்னேற்றம் குறித்து அறிக்கைப்படுத்தப்படுகின்றது.

கணக்காய்வுக் குழுவானது உள்ளகக் கணக்காய்விலிருந்து முறையான அறிக்கைகளை அவ்வப்போது பெறுவதோடு குறிப்பிட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு கணக்காய்வின் மூலமான கண்டுபிடிப்புகள் பற்றிய சாராம்சம் இவ்வறிக்கைகளில் உள்ளடக்கப்படும். நிர்வாகம் தொடர்பான கருத்துக்களும் அதன் ஒரு பகுதியாவதோடு கணக்காய்வின் மூலமாக அவதானிக்கபட்ட சூழ்நிலைகளுக்கு வழிவகுத்த அடிப்படைக் காரணிகள் மற்றும் அத்தகைய சூழ்நிலைகள் மீண்டும் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் ஆகியவற்றை இக்குழுவானது மதிப்பாய்வு செய்கிறது.

02. உள்ளகக் கணக்காய்வு மற்றும் அரச கணக்காய்வின் உதவியோடு, நிறுவனத்தின் செயற்பாடுகள், நிதிக்கட்டுப்பாடுகள் மற்றும் செயற்திறன் மதிப்பீடு செய்யப்படுவதோடு அவற்றுக்கான செலவினங்கள், வருவாய் செயலாக்கம் மற்றும் மூலதனச்செலவுகளுக்கான அனுமதி வழங்குவது தொடர்பான எல்லை நிர்ணயம்இ கையெழுத்திடும் அதிகாரம் கொண்ட அதிகாரிகள், தகவல் தொழிநுட்ப செயலிகளின் கட்டுப்பாடு மற்றும் மேம்பாடு, நிறுவன கட்டமைப்புஇகொள்கைகள், பணிகளை ஒதுக்கீடு செய்தல் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும் மதிப்பாய்வுகளை உள்ளடக்கியுள்ளது. நிறுவன நிதிக்கூற்றின் காசுப்பாய்ச்சலானது தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது. இதன்போது கண்டறியப்பட்ட குறைபாடுகள், தேவையான மேம்பாடுகளுக்கான பரிந்துரைகளுடன் அறிக்கைப்படுத்தப்படும்.




## நடாத்தப்பட்ட கணக்காய்வுக் குழு கூட்டங்களின் எண்ணிக்கை

2021 ஆம் ஆண்டிற்காக மூன்று(03) கூட்டங்கள் நடைபெற்றதோடு அதற்கான வருகைகள் பின்வருமாறு.

| கணக்காய்வுக் குழு | வருகை | வருகை தராமை |
|---|---|---|
| திரு.எஸ்.ஐ.எம். ரோசா | 3/3 | இல்லை |
| திரு.டப்ளியூ.ஏ. குலசூரிய | 3/3 | இல்லை |
| வைத்தியர். லால் ஏக்கநாயக்க | 2/3 | 1 |
| திரு.எச். ஜூட் பெரேரா | 3/3 | இல்லை |
| திருமதி.டி.எச். கலங்சூரிய | 2/2 | இல்லை |

**திரு.எஸ்.ஐ.எம்.ரோசா**
தலைவர்
கணக்காய்வு மற்றும்
முகாமைத்துவ குழு

# நிதி அறிக்கை




- நிதிக்கூற்று
- நிதிச்செயற்பாட்டுக் கூற்று
- காசுப்பாய்ச்சல் கூற்று
- மூலதன பாய்ச்சல் கூற்று
- நிதிக்கூற்று குறிப்புகள்
- நிதிக்கூற்றுக் குறிப்புகள்
- சுயாதீன கணக்காய்வாளர்களின் அறிக்கை
- முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள

## இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை நிதிக்கூற்று

* மீள் குறிப்பிடப்பட்டுள்ளது

| உள்ளவாறான மிதி | குறிப்பு | 31ம் திகதி மார்கழி 2021 | 31ம் திகதி மார்கழி 2020 |
|---|---|---|---|
| | | (இலங்கை ரூபாய்) | |
| **நிலையான சொத்துக்கள** | | | |
| காணி,கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் | 1 | 210,455,133.22 | 225,864,722.09 |
| மூலதனக் குறைவேலைகள் | 2 | 60,211,400.00 | 60,211,400.00 |
| | | **270,666,533.22** | **286,076,122.09** |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| இருப்புக்கள் | 3 | 2,005,580.20 | 1,805,639.63 |
| வருமதிகள் | 4 | 1,296,100.00 | 691,040.00 |
| முற்கொடுப்பனவு செலவினங்கள் | 5 | 384,224.03 | - |
| காசும் ஏனையவையும் | 6 | 3,750,780.96 | 2,166,789.93 |
| | | **7,436,685.19** | **4,663,469.56** |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **278,103,218.41** | **290,739,591.65** |
| **மூலதனமும் பொறுப்புக்களும்** | | | |
| **நிதியிடல்:** | | | |
| திறைசேரி நிதி | 7 | 251,811,034.63 | 266,229,421.89 |
| அமைச்சு நிதி | 8 | 1,445,090.38 | 2,198,212.88 |
| திரண்ட நிதியம் | 9 | 6,314,053.91 | 4,465,033.91 |
| மீள்மதிப்பீட்டுத் தொகை | 10 | 2,547,085.96 | 2,547,085.96 |
| | | **262,117,264.88** | **275,439,754.64** |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 11 | 12,300,559.94 | 12,300,559.94 |
| சென்மதிகள் | 12 | 1,228,036.09 | 1,194,630.66 |
| மீளளிக்கப்படும் வைப்புக்கள் | | 40,000.00 | 85,000.00 |
| ஊழியருக்கான பணிக்கொடை ஏற்பாடு | 13 | 2,417,357.50 | 1,719,646.41 |
| | | **15,985,953.53** | **15,299,837.01** |
| | | **278,103,218.41** | **290,739,591.65** |

மேற்படி நிதிக்கூற்றானது இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பொதுத்தாபனங்களுக்கான நியமங்களுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது.

**திரு.எச்.எம்.சீ.ஜி.தயாரத்ன**
கணக்காளர்

**வைத்தியர்.சீவலி ஜயவிக்ரம**
பணிப்பாளர் நாயகம்

மேற்படி பணிப்பாளர் குழு சார்பாக கையொப்பமிடப்பட்ட நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுக்கும் வெளிப்படுத்துவதற்கும் பணிப்பாளர்குழுவினரே பொறுப்புடையவர்கள்.

**திரு.டப்ளியூ.ஏ.குலசூரிய**
பணிப்பாளர்

**பேராசிரியர் அர்ஜுன டி சில்வா**
தலைவர்

**இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை**

**31ம் திகதி மார்கழியில் முடிவடைந்தஆண்டுக்கான அறிக்கை**

**நிதிச்செயற்பாட்டுக் கூற்று**

* மீள் குறிப்பிடப்பட்டுள்ளது

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | (இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது) | |
| திறைசேரி நிதியம் | 7 | 64,474,387.26 | 56,562,628.27 |
| அமைச்சு நிதி | 8 | 753,122.50 | 753,122.50 |
| ஏனைய வருமானங்கள் | 14 | 1,849,020.00 | 2,927,395.91 |
| **மொத்த வருமானங்கள்** | | 67,076,529.76 | 60,243,146.68 |
| நிர்வாகச் செலவினங்கள் | 15 | (65,227,509.76) | (57,315,750.77) |
| **ஆண்டிற்கான மொத்த மிகைகள் / (பற்றாக்குறைகள்)** | | **1,849,020.00** | **2,927,395.91** |

**இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை**

**31ம் திகதி மார்கழியில் முடிவடைந்தஆண்டுக்கான அறிக்கை**

**காசுப்பாய்ச்சல் கூற்று**

* மீள் குறிப்பிடப்பட்டுள்ளது

| | குறிப்பு | 2021 | 2020 |
|---|---|---|---|
| | | (இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது) | |
| **தொழிற்பாட்டுச் செயல்களால் ஏற்பட்ட காசுப்பாய்ச்சல்** | | | |
| தேறிய மிகை | | 1,849,020.00 | 2,927,395.91 |
| **செம்மையாக்கல்** | | | |
| தேய்மானம் | | 17,511,392.06 | 17,022,491.22 |
| திறைசேரி நிதி ஏற்பாடு | 7 | (64,474,387.26) | (56,562,628.27) |
| | | **(45,113,975.20)** | **(36,612,741.15)** |
| **மூலதனக் குறைவேலைபாடுகள்** | | | |
| (அதிகரித்தல்)/(குறைவு) இருப்புக்கள் | | (199,940.57) | 212,949.37 |
| (அதிகரித்தல்)/(குறைவு), சோதனை மூலமான வருமதிகள் | | (605,060.00) | (691,040.00) |
| (அதிகரித்தல்)/(குறைவு) முற்கொடுப்பனவுச் செலவினங்கள் | | (384,224.03) | - |
| (அதிகரித்தல்)/(குறைவு) மீளளிக்கப்பட்ட வைப்புக்கள் | | (45,000.00) | 50,000.00 |
| (அதிகரித்தல்)/(குறைவு) ஊழியருக்கான பணிக்கொடை ஏற்பாடு | 13 | 697,711.09 | (91,877.47) |
| (அதிகரித்தல்)/(குறைவு) நிறுத்திவைக்கப்பட்ட நிதி | | - | 6,626,927.74 |
| (அதிகரித்தல்)/(குறைவு) அட்டுறுச்செலவுகள் | | 33,405.43 | 429,702.49 |
| | | **(503,108.08)** | **6,536,662.13** |
| **நடைமுறை மூலதனத்தின் மாற்றங்கள்** | | **(45,617,083.28)** | **(30,076,079.01)** |
| **முதலீட்டு நடவடிக்கையிலிருந்து பெறப்பட்ட தேறியகாசு** | | | |
| நிலையான சொத்துக்கொள்வனவு | | (2,101,803.19) | (31,809,152.86) |
| மூலதனக் குறைவேலைகள் | | - | 5,057,391.03 |
| திறைசேரி நிதி மீள் நிரப்பு | | - | (15,000,000.00) |
| | | **(2,101,803.19)** | **(41,751,761.83)** |
| **நிதிச்செயற்பாடு மூலம் பெறப்பட்ட நிதி** | | | |
| திறைசேரி நிதி | | 50,056,000.00 | 71,711,000.00 |
| செயலாளர் - விளையாட்டுத்துறை அமைச்சு | | (753,122.50) | (753,122.50) |
| | | **49,302,877.50** | **70,957,877.50** |
| **செயற்பாட்டிலிருந்து பெற்ற தேறியகாசு** | | **1,583,991.03** | **(869,963.34)** |
| **ஆரம்ப காசுமீதி** | | **2,166,789.93** | **2,933,415.77** |
| **இறுதி காசுமீதி** | | **3,750,780.96** | **2,063,452.43** |

**இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை**

**31ம் திகதி மார்கழி 2021 முடிவடைந்த ஆண்டுக்கான அறிக்கை**

**மூலதன பாய்ச்சல் கூற்று**

(இலங்கை ரூபாய்களில் தரப்பட்டுள்ளது)

| | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூபாய் | திரண்ட நிதியம் ரூபாய் | திரண்ட நிதியம் ரூபாய் |
|---|---|---|---|
| ஆரம்ப மீதி 01.01.2015 | - | 110,540.00 | 110,540.00 |
| தேறிய மிகை | - | 94,999.91 | 94,999.91 |
| இறுதி மீதி 31.12.2015 | - | **205,539.91** | **205,539.91** |
| தேறிய மிகை | - | 155,063.00 | 155,063.00 |
| இறுதி மீதி 31.12.2016 | - | **360,602.91** | **360,602.91** |
| தேறிய மிகை | - | 29,800.00 | 29,800.00 |
| இறுதி மீதி 31.12.2017 | - | **390,402.91** | **390,402.91** |
| தேறிய மிகை | - | 429,424.00 | 429,424.00 |
| இறுதி மீதி 31.12.2018 | - | **819,826.91** | **819,826.91** |
| தேறிய மிகை | - | 717,811.00 | 717,811.00 |
| இறுதி மீதி 31.12.2019 | - | **1,537,637.91** | **1,537,637.91** |
| தேறிய மிகை | - | 2,927,395.91 | 2,927,395.91 |
| மறுமதிப்பீட்டு இருப்பு | 2,547,085.96 | - | 2,547,085.96 |
| இறுதி மீதி 31.12.2020 | **2,547,085.96** | **4,465,033.82** | **7,012,119.78** |
| (குறிப்பு 13) * பிழை திருத்தத்திற்கான செம்மையாக்கல் | - | (103,337.50) | (103,337.50) |
| இறுதி மீதி 31.12.2020 - மீள் குறிப்பிடப்பட்டுள்ளது | **2,547,085.96** | **4,361,696.32** | **6,908,782.28** |
| தேறிய மிகை | | 1,849,020.00 | 1,849,020.00 |
| இறுதி மீதி 31.12.2021 | **2,547,085.96** | **6,210,716.32** | **8,757,802.28** |

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை

31ம் திகதி மார்கழி மாதம் 2021 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று குறிப்புகள்

நிதிக்கூற்று குறிப்புகள்

## 1. கணக்கீட்டு எண்ணக்கரு தொடர்பான அறிக்கைகள்

### 1.1. பொது

இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனமானது 2013 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 11ம் திகதி இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் 2013 இல. 33 விளையாட்டுகளில் ஊக்கமருந்து பாவனைக்கெதிரான இணக்கப்பாட்டுச் சட்டத்திற்கமைய நிறுவப்பட்டுள்ளதுடன் நிறுவனத்தின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகமானது இல 363/12 இசுகததாச விளையாட்டரங்கு-ப்ளொக் டீ, ஸ்டேடியம் பாரக்கிங் ரோட்இ சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை கொழும்பு - 14 இல் அமைந்துள்ளது.

### 1.1.1. நோக்கங்கள

அ) விளையாட்டிலிருந்து ஊக்குமருந்து பாவனையை பூண்டோடு அழிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

ஆ) விளையாட்டுகளுடன் தொடர்புபட்ட ஊக்குமருந்து பயன்பாடு எதிர்ப்பு தொடர்பான துறைகள் மற்றும் உரிய ஆராய்ச்சி உட்பட முகவர் நிறுவனத்திற்கு சமமான செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஏனைய சர்வதேச அமைப்புக்களுடன் பரஸ்பர ரீதியில் பரிசோதனை செயற்பாடுகளை நிகழ்த்துவதற்கான ஊக்குவிப்பை வழங்குதல்.

### 1.1.2. கணக்கீட்டு நியமம் தொடர்பான உறுதியுரைக் கூற்று

நிறுவனத்தின் நிதிக்கூற்று அறிக்கைகளானது இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட பொது நிறுவனங்களுக்கான கணக்கீட்டு விதிகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

### 1.1.3. நிதிக்கூற்றுத் தயாரித்தலுக்கான அடிப்படை கணக்கீட்டு எண்ணக்கரு

நிதிக்கூற்றுகளானது வரலாற்றுக்கிரைய எண்ணக்கருவுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்டது. பணவீக்கம் தொடர்பான விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.

### 1.1.4. ஐந்தொகைக்குப் பின்னரான செம்மையாக்கல்

ஐந்தொகை திகதிக்குப் பின்னர் காத்தியப்படக்கூடிய பொருள் விளைவுகளுக்காக நிதிக்கூற்றில் தேவையான மாற்றங்கள் செய்யப்பட்டு கணக்கில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## 1.2. சொத்துக்களும் மதிப்பிடலும்

நடைமுறைச் சொத்துக்களானவை காசு, வங்கிமீதி மற்றும் ஏனையவை ஒரு வருட காலத்திற்குள் காசாக மாற்றப்படக்கூடியவை.

### 1.2.1.சொத்துக்கள்

நிலையான சொத்துக்கள் யாவும் பெறுமானத் தேய்வுக்கு உட்படுத்தப்பட்டவை.

### 1.2.2. நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்மானம்

தேய்மான ஏற்பாடானது நேர்கோட்டுமுறையில் கணிப்பிடப்படுகிறது. குறித்த வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் அமைக்கப்பட்ட கட்டிடத்திற்கு முழு ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு கணிக்கப்படும். குறித்த ஆண்டிற்கான பெறுமானத் தேய்வானது வருடத்திற்கான வருமானச் செயற்பாட்டுக் கூற்றில் பதிவழிக்கப்படும்.

- கணினி மற்றும் உபகரணங்கள் 25%
- தளபாடங்கள 10%
- ஏனைய உபகரணங்கள் 25%
- மோட்டார் வாகனங்கள் 12.5%
- ஆய்வுகூட உபகரணங்கள் 25%
- ஆய்வுகூட தளபாடங்கள் 10%
- கட்டிடங்டகள் 5%

### 1.2.3. மீள்மதிப்பீடு

கணினி உபகரணங்கள் மற்றும் பிற உபகரணங்களின் மீள்மதிப்பீடானது நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை தொழில்சார் நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகிறது. தேறிய மிகையானது சொத்தின் நிகர பெறுமதியினூடாக கணிக்கப்பட்டு சொத்தானது மீள்மதிப்பீட்டுத்தொகைக்கு மாற்றீடு செய்யப்படும்.

### 1.2.4. கையிருப்புக்கள்

SLPSAS-9, Para-16 இன்படி பரிமாற்றம் அல்லாத பரிவர்த்தனை மூலம் சரக்குகள் கையகப்படுத்தப்பட்ட ஆண்டில் முடிவடைந்த சரக்குகள் மதிப்பிடப்பட்டதோடு அவற்றின் விலையானது கையகப்படுத்தப்பட்ட திகதியின்படி அவற்றின் நியாயமான மதிப்பில் அளவிடப்படும்.சரக்குகளின் நியாயமான மதிப்பானது (அ) கொள்முதல் விலை (ஆ) இறக்குமதி வரிகள் மற்றும் பிற வரிகள் (இ) போக்குவரத்துஇகையாளுதல் மற்றும் முடிவடைந்த பொருட்களை வாங்குவதற்கு நேரடியாகக் குறிப்பிடப்படும் ஏனைய செலவுகள் அடங்கும்.

- மனித சிறுநீர் மாதிரி சேகரிப்பு உபகரணங்கள்
- குதிரைகளுக்கான சிறுநீர் மாதிரி சேகரிப்பு உபகரணங்கள்
- காகிதாதிகள்
- டோனர்கள் மற்றும் காட்ரிஜ்கள்

**1.3.** நிதிக்கூற்று தயாரிப்பின்போது அடையாளங்காணப்பட்ட அனைத்துப் பொறுப்புக்களும் கணக்கில் வைக்கப்பட்டுள்ளன. ஐந்தொகைக்கான தேதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தப்படவேண்டிய அல்லது கோரிக்கையின் பேரில் செலுத்தப்பவேண்டிய கொடுப்பனவுகள் நடைமுறைப் பொறுப்புக்களாக நிதிக்கூற்றில் அடையாளங்காட்டப்பட்டுள்ளன. நிலையான பொறுப்புக்கள் என்பது ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலப்பகுதிக்குள் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகளைக் குறிக்கும்.

### 1.3.1. ஊழியர்களின் உரிமைகள

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான கொடுப்பனவுகள் யாவும் வருடத்திற்கான வருமானச் செயற்பாட்டுக் கூற்றில் செலவுகளாகக் காட்டப்படும்.

### 1.3.2. ஊழியர்களின் பணிக்கொடை கொடுப்பனவுகள்

இலங்கை கணக்கீட்டு நியமம் 16 க்கு அமைவாக ஒவ்வொரு ஊழியருக்குமான பணிக்கொடை ஏற்பாடானது அவரது முதலாவது சேவைக்கால ஆண்டிலிருந்து கணிக்கப்படும். எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12ம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கு அமைவாக தொடர்ச்சியாக ஐந்து வருடகாலச் சேவையினைப் பூர்த்திசெய்த ஊழியரே பணிக்கொடைக் கொடுப்பனவுக்கு உரித்துடையவர். இப்பணிக்கொடையானது ஒவ்வொரு ஆண்டு இறுதிமாதச் சம்பளத்தின் அரைப்பகுதியே செலவினமாகக் கணிக்கப்படும்

### 1.4. வருமானக்கூற்று

### 1.4.1. வருமானங்கள்

இலங்கை பொதுக் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக வருமானங்கள் யாவும் அட்டுறு முறையில் கணிக்கப்பட்டுள்ளது.

### 1.4.2. செலவினங்கள்

வருமான மிகையானது எல்லாச்செலவுகளும் உள்ளடங்கலாக வருமான வரிக்கு முன்னரான இலாபத்தைக் குறிக்கும். வருமான விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானங்கள் மற்றும் இழப்புகள், வரிவதிப்புக்கு முன்னர் மற்றும் அனைத்து பொறுப்புகளுக்குமான ஒதுக்கீட்டின் பின்னர் அடையாளம் காணப்பட்டுள்ளன.

சொத்துக்களைப் பராமரிப்பதிலும் வணிகத்தை நடாத்துவதிலும் ஏற்படும் செலவுகள் நிகரப் பற்றாக்குறையைக் கணக்கிடுவதில் வருமான விபரங்களுடன் சரிசெய்யப்பட்டுள்ளன.

தொலைபேசி, மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்கள் மற்றும் அத்தகைய வசதிகளுக்கு உரித்துடைய உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்களால் வசூலிக்கப்படும் கட்டணம் மற்றும் அதற்கான செலவுகள் நிரல்களில் விபரிக்கப்பட்டுள்ளன.

### 1.4.3. கொடைகள்

கொடைகளும் உதவிகளும் அதனுடன் தொடர்புடைய செலவுகளுடன் செம்மையாக்கப்படும். கொடைகளும் உதவிகளும் சொத்துக்களாக இருப்பின் குறிப்பிட்ட ஆயுட்கால அடிப்படையில் வருமானச் செலவுக்கூற்றில் பதிவழிக்கப்படும்.

### 1.4.4. ஏனைய நிதியங்களும் உதவிகளும்

ஏனைய நிதியங்கள் மற்றும் உதவிகளால் கிடைக்கப்பெற்ற நிதியானது அதனுடன் தொடர்புபட்ட செலவினங்களின் பின்னர் ஏதாவது நிலுவைகள் இருக்குமாயின் அவை குறித்த நோக்கங்கள், திட்டங்கள் முடிவடைந்த பின்னர் வருடாந்த வருமானக்கூற்று அறிக்கையில் பதிவழிக்கப்படும்.அமைச்சக மானியங்கள் மற்றும் நிதியுதவிகள் விரிவான வருமான அறிக்கையில் செலவாக கணக்குவைக்கப்பட்டுள்ளன, நிகழ்வின் முடிவில் ஏதேனும தொகை காணப்படுமிடத்து அது ஏனைய வருமானமானமாக வருமான அறிக்கையில் குறிப்பிடப்படவேண்டும்.

## 1.5. காசுப் பாய்ச்சல் கூற்று

### 1.5.1. காசு

கையிலுள்ள பணம் மற்றும் அதிக பணப்புழக்கம் உள்ள சொத்துக்கள் மற்றும் எவ்வித ஆபத்தும் இல்லாமல் உடனடியாக பணமாக மாற்றக்கூடிய சொத்துக்கள் உடனடியாக பணமாக மாற்றக்கூடிய சொத்துக்கள் பணமாக அடையாளம் காணப்பட்டுள்ளன. திரவத்தன்மையுள்ள காசுமீதியும் வங்கிமீதியும் காசாகக் காட்டப்பட்டுள்ளது. ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல்க் கூற்றானது நேரில் முறையில் தயாரிக்கப்பட்டது.

### 1.5.2. ஐந்தொகைக்குப் பின்னான செம்மையாக்கல்

குறிப்பிடப்பட்ட செம்மையாக்கல் நடவடிக்கைகள் நிதிக் கூற்றுக்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை
31ம் திகதி மார்கழியில் முடிவடைந்த ஆண்டுக்கான அறிக்கை
நிதிக்கூற்றுக் குறிப்புகள்

குறிப்பு-01
சொத்துக்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்
(இலங்கை ரூபாய்)

| செலவினங்கள்/ மீள்மதிப்பீடுசெய்யப்பட்டது | 01.01.2021 இல் உள்ளவாறான மீள்குறிப்பிடப்பட்டுள்ள மீதி | வருடத்திற்கான செம்மையாக்கல் | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|
| கட்டிடங்களும் அமைப்புக்களும் | 216,678,822.95 | 307,215.09 | 216,986,038.04 |
| தளபாடங்கள் | 873,436.35 | - | 873,436.35 |
| கட்டிடங்களும் அமைப்புக்களும் | 1,255,850.00 | 1,483,930.00 | 2,739,780.00 |
| ஏனைய உபகரணங்கள் | 2,329,650.00 | 21,000.00 | 2,350,650.00 |
| வாகனங்கள்-WPLW-0353 | 6,024,980.00 | - | 6,024,980.00 |
| ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள் | 11,155,842.25 | 289,658.10 | 11,445,500.35 |
| ஆராய்ச்சிப் பிரிவுக்கான தளபாடங்கள் | 16,876,414.30 | - | 16,876,414.30 |
| | **255,194,995.85** | **2,101,803.19** | **257,296,799.04** |

| திரண்ட பெறுமானத்தேய்வு | 01.01.2021 இல் உள்ளவாறான மீள்குறிப்பிடப்பட்டுள்ள மீதி | வருடத்திற்கான செம்மையாக்கல் | 31.12.2021 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|
| கட்டிடங்களும் அமைப்புக்களும் | 21,481,043.86 | 10,849,301.90 | 32,330,345.76 |
| தளபாடங்கள் | 518,729.28 | 87,343.64 | 606,072.92 |
| கணினிகளும் உபகரணங்களும் | - | 684,945.00 | 684,945.00 |
| ஏனைய உபகரணங்கள் | - | 587,662.50 | 587,662.50 |
| வாகனங்கள்-WPLW-0353 | 2,763,934.63 | 753,122.50 | 3,517,057.13 |
| ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள் | 2,878,924.56 | 2,861,375.09 | 5,740,299.65 |
| ஆராய்ச்சிப் பிரிவுக்கான தளபாடங்கள் | 1,687,641.43 | 1,687,641.43 | 3,375,282.86 |
| | **29,330,273.76** | **17,511,392.06** | **46,841,665.82** |
| **31/12/2021 இல் உள்ளவாறான தேறிய ஏட்டுப் பெறுமதி** | **225,864,722.09** | **(15,409,588.87)** | **210,455,133.22** |

**இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை**
**31ம் திகதி மார்கழியில் முடிவடைந்த ஆண்டுக்கான அறிக்கை**
**நிதிக்கூற்றுக் குறிப்புகள்**

(இலங்கை ரூபாய்)
* மீள் குறிப்பிடப்பட்டுள்ளது

| | 2021 | 2020 |
|---|---|---|
| **குறிப்பு-02** | | |
| **மூலதனக் குறைவேலைகள்** | | |
| ஆராய்ச்சிப் பிரிவுக்கான உபகரணங்கள் | 60,211,400.00 | 60,211,400.00 |
| | **60,211,400.00** | **60,211,400.00** |

கட்டிடக்குறைவேலை என்பது ஆராய்ச்சிப் பிரிவிற்கான தளபாடங்கள் மற்றும் LC-MS/MS உபகரணத்தின் கொள்வனவு போன்ற செலவினங்களைக்குறிக்கும். ஆராய்ச்சிப் பிரிவானது முழுமையாக செயற்படும்போது அச்செலவினமானது சொத்துக்களாக மாற்றப்பட்டு கணக்கில்வைக்கப்படும்.

| | 2021 | 2020 |
|---|---|---|
| **குறிப்பு-03** | | |
| **இருப்பு** | | |
| இறுதி இருப்பு-மாதிரி சேகரித்தல் கருவிகள் (வீர வீராங்கணைகளுக்கானது) | 1,489,540.00 | 1,054,576.13 |
| இறுதி இருப்பு-மாதிரி சேகரித்தல் கருவிகள் (குதிரைகளுக்கானது) | - | 115,710.00 |
| இறுதி இருப்பு-எழுதுகருவிகள் | 236,220.00 | 635,353.50 |
| இறுதி இருப்பு-டோனர்கள் மற்றும் காட்ரிஜ்கள் | 279,820.20 | - |
| | **2,005,580.20** | **1,805,639.63** |
| **குறிப்பு-04** | | |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையும்** | | |
| பரிசோதனை வருமானங்கள்-இலங்கை கிரிக்கட் | 672,000.00 | 691,040.00 |
| பரிசோதனை வருமானங்கள்-ரோயல் டர்ப் கழகம் | 624,100.00 | - |
| | **1,296,100.00** | **691,040.00** |
| **குறிப்பு-05** | | |
| **முன்வைப்பு செலவுகள்** | | |
| ஜோன் கீல்ஸ் ஒபிஸ் ஒடோமேஷன் (ப்ரைவட்) லிமிடட் | 4,864.70 | - |
| மெட்ரோபொலிடன் ஒபிஸ் (ப்ரைவட்) லிமிடட் | 2,880.00 | - |
| ஒபிஸ்ட்ரொனிக்ஸ் (ப்ரைவட்)லிமிடட் | 7,083.33 | - |
| ஹேலீஸ் அவன்டுரா (ப்ரைவட்) லிமிடட் | 132,525.00 | - |
| ஜோர்ஜ் ஸ்டுவர்ட் சொலூஷன்ஸ் | 140,481.00 | - |
| அமீகோ டெக்னொலஜீஸ் (ப்ரைவட்) லிமிடட் | 96,390.00 | - |
| | **384,224.03** | **-** |
| **குறிப்பு-06** | | |
| **காசு மற்றும் காசுக்கு சமமானவையும்** | | |
| இலங்கை வங்கி-கணக்கிலக்கம் (75463697) | 3,750,780.96 | 2,166,789.93 |
| | **3,750,780.96** | **2,166,789.93** |
| **குறிப்பு-07** | | |
| **திறைசேரி நிதி** | | |
| ஆரம்ப மீதி 01.01.2021 | 266,229,421.89 | 266,081,050.16 |
| முதலீடு -2021 | 50,056,000.00 | 71,711,000.00 |
| பதிவழிக்கப்பட்ட நிதி 2021 | (64,474,387.26) | (56,562,628.27) |
| திறைசேரி நிதி | - | (15,000,000.00) |
| இறுதி மீதி 31.12.2021 | **251,811,034.63** | **266,229,421.89** |

**இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை**
**31ம் திகதி மார்கழியில் முடிவடைந்த ஆண்டுக்கான அறிக்கை**
**நிதிக்கூற்றுக் குறிப்புகள்**

**(இலங்கை ரூபாய்)**
*** மீள் குறிப்பிடப்பட்டுள்ளது**

| | 2021 | 2020 |
|---|---|---|
| **குறிப்பு-08** | | |
| **அமைச்சு நிதி** | | |
| ஆரம்ப மீதி 01.01.2021 | 2,198,212.88 | 2,951,335.38 |
| வருட வருமான செயற்பாட்டு மிகை 2021 | (753,122.50) | (753,122.50) |
| இறுதி மீதி 31.12.2021 | **1,445,090.38** | **2,198,212.88** |
| **குறிப்பு-09** | | |
| **திரண்ட நிதியம்** | | |
| ஆரம்ப மீதி | 4,465,033.91 | 1,537,638.00 |
| நிதிக்கூற்று நடவடிக்கைகளிலிருந்து மாற்றப்பட்ட மிகை | 1,849,020.00 | 2,927,395.91 |
| இறுதி மீதி | **6,314,053.91** | **4,465,033.91** |
| **குறிப்பு-10** | | |
| **மீள்மதிப்பீட்டு இருப்பு** | | |
| மீள்மதிப்பீட்டு இருப்பு | 2,547,085.96 | 2,547,085.96 |
| இறுதி மீதி | **2,547,085.96** | **2,547,085.96** |
| **குறிப்பு-11** | | |
| **நிறுத்திவைக்கப்பட்ட நிதி** | | |
| ஜோர்ஜ் ஸ்ட்ருவர்ட்ஸ எஞ்சினியரிங் (ப்ரைவட்)லிமிட்டட் | 2,549,144.14 | 2,549,144.14 |
| எனலிட்டிக்கல் இன்ஸ்ட்ருமன்ட்ஸ் | 472,915.80 | 472,915.80 |
| ஹேலீஸ் லைப் சயன்ஸ் (ப்ரைவட்) லிமிட்டட் | 9,278,500.00 | 9,278,500.00 |
| | **12,300,559.94** | **12,300,559.94** |
| **குறிப்பு-12** | | |
| **அட்டுறுக்களும் சென்மதிகளும்** | | |
| தொடர்பாடல் செலவுக்கான கொடுப்பனவு | 32,939.62 | 83,003.78 |
| மின்சாரம் மற்றும் நீர் விநியோகத்துக்கான செலவுகள் | 225,776.06 | 170,091.90 |
| குத்தகை வாகனக் கொடுப்பனவுகள் | 216,000.00 | 216,000.00 |
| வேதனங்களும் சம்பளங்களும் | - | 5,000.00 |
| மேலதிகக் கொடுப்பனவுக்கான நிலுவைகள் | 63,561.33 | 74,798.55 |
| பிரயாணச்செலவுகள் | 88,000.00 | 151,220.00 |
| பாதுகாப்பு ஊழியருக்கான கொடுப்பனவு | 192,014.00 | 190,814.00 |
| துப்புரவு பணியாளர்களுக்கான கொடுப்பனவு | 150,050.00 | 23,147.73 |
| கணக்காய்வுக்கான கட்டணம் | - | 117,600.00 |
| ஊக்குமருந்து பரிசோதனைக் கட்டணம் | 69,458.48 | 162,954.70 |
| பராமரிப்புச் செலவுகள்-காணி மற்றும் கட்டிடங்கள் | 33,480.00 | - |
| பராமரிப்புச் செலவுகள்-கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் | 156,756.60 | - |
| | **1,228,036.09** | **1,194,630.66** |
| **குறிப்பு-13** | | |
| **ஊழியர்களின் பணிக்கொடைக்கான ஏற்பாடு** | | |
| ஆரம்ப மீதி | 1,719,646.41 | 1,708,186.38 |
| வருடத்திற்கான ஊழியர்களின் பணிக்கொடைக்கான செலவினங்கள் | - | (103,337.50) |
| வருடத்திற்கான செலவு | 697,711.09 | 114,797.53 |
| இறுதி மீதி | **2,417,357.50** | **1,719,646.41** |

**இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை**
**31ம் திகதி மார்கழியில் முடிவடைந்த ஆண்டுக்கான அறிக்கை**
**நிதிக்கூற்றுக் குறிப்புகள்**

(இலங்கை ரூபாய்)
* மீள் குறிப்பிடப்பட்டுள்ளது

| | 2021 | 2020 |
|---|---|---|

* பணிக்கொடைக்கான ஒதுக்கீடு முந்தைய ஆண்டு குறைவாகப் பதிவாகியதால் அது திருத்திமைக்கப்பட்டு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.

**குறிப்பு-14**
**ஏனைய வருமானங்கள்**

| | 2021 | 2020 |
|---|---|---|
| ஊக்குமருந்து பரிசோதனைக் கட்டணம் | 1,781,520.00 | 2,738,253.71 |
| மீளளிக்கப்படாத வைப்புக்கள் | - | 19,000.00 |
| வாடகை வருமானங்கள் | 67,500.00 | 67,500.00 |
| ஏனைய வருமானங்கள | - | 102,642.20 |
| | **1,849,020.00** | **2,927,395.91** |

**குறிப்பு-15**
**நிருவாகச் செலவுகள்**

| | 2021 | 2020 |
|---|---|---|
| வேதனங்களும் சம்பளங்களும் | 12,209,450.24 | 10,470,508.38 |
| தவிசாளருக்கான கொடுப்பனவு | 450,000.00 | 409,913.79 |
| மேலதிக மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் | 546,318.66 | 442,697.25 |
| ஊழியர் சேமலாப நிதிக் கொடுப்பனவு | 1,393,945.95 | 1,223,474.93 |
| ஊழியர் நம்பிக்கை நிதியக் கொடுப்பனவு | 348,486.48 | 305,868.73 |
| உள்நாட்டு பிரயாண மற்றும் எரிபொருள் செலவுகள் | 600,000.00 | 600,000.00 |
| வெளிநாட்டு பிரயாணமும் மற்றும் இணைந்தபடிச் செலவுகள் | - | 21,860.00 |
| எழுதுகருவிகளும் சிறுசெலவுகளும் | 1,169,828.02 | (207,694.49) |
| பிரயாண மற்றும் எரிபொருள் செலவுகள் | 963,950.00 | 821,863.00 |
| வாகனங்களுக்கான பராமரித்தல் செலவு | 105,550.67 | 195,112.21 |
| கட்டிடங்கள் பராமரித்தலுக்கான செலவு | 770,948.36 | 357,918.00 |
| உபகரணங்களும் இயந்திரங்களுக்குமான பராமரிப்புச் செலவு | 782,236.51 | 637,902.28 |
| பிரயாணச் செலவுகள் | 1,066,840.00 | 1,115,445.00 |
| தொழிற்பாட்டுக் குத்தகை வாகனத்திற்கான கட்டணம் | 2,592,000.00 | 2,592,000.00 |
| தொடர்பாடல் செலவுகள் | 381,823.32 | 907,068.69 |
| மின்சாரம்,நீர் விநியோகத்திற்கான செலவுகளும் | 2,688,411.81 | 1,802,086.45 |
| ஊக்குமருந்து பரிசோதனைக்கான செலவுகள் | 9,350,323.03 | 11,521,640.07 |
| விளம்பரங்கள் மற்றும் பிரச்சாரச்செலவுகள் | 1,785,768.40 | 982,448.00 |
| பயிற்சிகள் மற்றும் கூட்டங்கள் தொடர்பான செலவுகள் | 996,275.14 | 679,034.00 |
| அங்கத்துவ கட்டணங்கள் | 2,869,043.03 | 304,688.80 |
| கணக்காய்வு செலவுகள் | - | 512,880.00 |
| விநியோகமும் ஆராய்ச்சிக்குமான செலவுகள் | 110,000.00 | 464,780.92 |
| விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கான செலவுகள் | 296,088.76 | 510,541.36 |
| திறன்விருத்திச் செலவு | 79,240.00 | 91,350.00 |
| தேய்மானச் செலவுகள் | 17,511,392.06 | 17,022,491.22 |
| பணிக்கொடைக்கான வருடச்செலவு | 697,711.09 | 114,797.53 |
| பராமரிப்புச் செலவுகள் | 1,537,598.76 | 1,334,770.65 |
| பாதுகாப்பு ஊழியருக்கான செலவினங்கள் | 2,247,913.00 | 2,080,304.00 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 298,557.45 | - |
| அமலாக்கச் செலவுகள் | 321,333.00 | - |
| கட்டிடம் மற்றும் அமைப்பு - புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 263,304.00 | - |
| வாகனங்கள் - புனர்நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் செலவுகள் | 793,172.02 | - |
| | **65,227,509.76** | **57,315,750.77** |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date

தலைவர்இ
ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மைஇ

**ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுகள் மற்றும் வேறு நடைமுறை மற்றும் சட்டரீதியான தேவைகள் மீதான 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் பிரிவு பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

## 1. நிதிக் கூற்றுகள்

### 1.1. கணக்காய்வு தொடர்பான அபிப்பிராயம்

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, நிதிப்பாய்ச்சல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுடன் தொடர்புடைய குறிப்புகள், முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகள் 2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச்சட்டத்தின் 30 ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசினுடைய அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகள் மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154(6) உறுப்புரை பிரகாரம் எனது அறிக்கை உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றலினையும், காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2. கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக்கணக்காய்வு நியமத்தின் கீழ் எனது பொறுப்பு , அவ்வறிக்கையில் நிதி கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவின் கீழ் மேலும் விபரிக்கபட்டுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிரயாயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவுானதும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன்.

## 1.3. ஊக்குப்பதாரத்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் 2020 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய விபரங்கள்.

இக் கணக்காய்வு அறிக்கை திகதிக்கு பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கப்படும் முகவராண்மையின் 2021 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை உள்ளடக்கப்பட்டிருப்பதோடு நிதிக்கூற்று மற்றும் அது தொடர்பாக அறிக்கையில் உள்ளடக்கப்படாத விபரங்கள் ஏனைய விபரங்கள் என அறியப்படும். இவ் ஏனைய விபரங்கள் தொடர்பாக நிர்வாகமானது பொறுப்புக்கூறவேண்டும்.

நிதிக்கூற்று தொடர்பாக என்னுடைய அபிப்பிராயத்தில் ஏனைய விபரங்கள் உள்ளடக்கப்படாததோடு என்னால் எவ்வகையிலும் அவை தொடர்பாக சான்றுப்படுத்தப்படமாட்டாது அல்லது அபிப்பராயம் தெரிவிக்கப்படமாட்டாது.

நிதிக்கூற்று சார்பான என்னுடைய கணக்காய்வுக்கு ஏற்ப, மேற்படி இனங்காணப்பட்ட ஏனைய விபரங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய சாத்தியக்கூறு உள்ளபோது அவற்றை வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது ஏனைய விபரங்கள் நிதிக்கூற்றுடன் அல்லது கணக்காய்வின்போது வேறு வகையில் பெறப்பட்ட எனது அறிவிற்கு ஏற்ப பெறுமான ரீதியில் பொருத்தமற்றதாக உள்ளதா என கருத்திற்கொள்வதாகும்.

முகவராண்மையின் 2021 வருடாந்த அறிக்கையை வாசிக்கும்போது அதில் பெறுமான ரீதியான பிழை உள்ளது என நான தீர்மானிக்கும் பட்சத்தில், உரிய திருத்தங்களை மேற்கொள்வதற்காக நிர்வாகத் தரப்பினருக்கு அவ்விடயங்கள் சம்பந்தமாக தொடர்பாடல் மேற்கொள்ளப்படவேண்டும். மேலும் உரிய திருத்தங்கள் செய்யப்படாத பிமைகள் காணப்படும் பட்சத்தில் அவை அரசியலமப்பின் 154(6) ஆம் சட்டத்தின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

## 1.4. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் தரப்பினரின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பெரும்பான்மைமையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுகளைத் தயரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவமானது நிர்ணயிக்கின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளுக்கு நிர்வாகமானது பொறுப்பு வகிக்கின்றது

நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போது, ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மை நிறுவனத்தினை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான தகைமையை நிர்ணயிப்பதானது முகாமைத்துவத்தின் பொறுப்பாவதுடன், முகவராண்மையினை முடிவுறுத்துவதற்கு தீர்மானிக்கும்போது அல்லது வேறு மாற்றுவழி இல்லாத பட்சத்தில் பணிகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டாலேயன்றி தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான அடிப்படையின் பிரகாரம் கணக்குக்காட்டுதல் மற்றும் முகவராண்மையை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்வதற்கான எண்ணக்கருக்களை வெளிப்படுதல் போன்றவை முகாமைத்துவத்துக்கான பொறுப்பாகும்.

ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டுக்கெதிரான இலங்கை முகவராண்மைக்கான நிதி அறிக்கைப்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பான பொறுப்பு நிர்வாகத் தரப்பினரைச் சார்ந்ததாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப உறுப்புரையின் பிரகாரம், முகவராண்மையின் ஆண்டுக்கான மற்றும் மாதாந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்றவகையில் வருமானம், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் உரியமுறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படவேண்டும்.

## 1.5. நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக் கூற்றானது, மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பெரும்பாண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டது என நியாயமான உறுதிப்பாட்டை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் அடங்கிய கணக்காய்வு அறிக்கையை வழங்குதல் என்பவை எனது குறிக்கோள்களாகும். நியாயமான உறுதிப்பாடானது அதியுயர் உறுதிப்பாடாக இருப்பினும் இலங்கை கணக்கிட்டு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வானது மேற்கொள்ளப்படும்பொது எப்பொழுதும் போதியளவான தவறான கூற்றுக்களை வெளிப்படுத்தும் உறதிப்பாடாக அமையாது. மோசடி மற்றும் தவறுகள் தனித்து அல்லது கூட்டாக ஏற்படுத்தும் விளைவுகளால் தவறான கூற்றுக்கள் ஏற்படுவதுடன், இந்நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு பரிசீலிப்பவர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானத்தின் மீது ஏற்படுத்தக்கூடிய பாதிப்பில் தங்கியுள்ளது.

தொழில்சார் ஒழுக்கநெறியுடனும் மற்றும் எவ்விதமான தொழில்சார் சந்தேகமும் இன்றி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும்,

- மோசடி மற்றும் தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய போதியளவு தவறான கூற்றுகளின் ஆபத்தினை இனங்காண்கையில் மற்றும் மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடி மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக்கொள்வதற்கு போதியளவானதும் பொருத்தமானதுமான கணக்காய்வு சான்றுகளை எனது அபிப்பிராயம் அடிப்படையாகக் கொண்டுள்ளது. பெரும்பாண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படுத்தப்படும் பாதிப்பைவிட மோசடியால் ஏற்படுத்தப்படும் பாதிப்பு ஆதிகமாகும். அத்துடன் பிரதிநிதிகள் மூலமான மோசடி, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளைத் தவிர்த்தல் மோசடிகள் ஏற்படுவதற்கான காரணங்களாகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பான அபிப்பிராயத்தை நோக்கத்தோடு அல்லாது சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பாக புரிந்துகொள்ளப்பட்டது.

- பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக்கொள்கை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்பாடுகளின் தகுதி போன்றவை மதிப்பீடு செய்யப்பட்டது.

- சம்பவங்கள் மற்றும் நிலைப்பாடுகள் காரணமாக முகவராண்மையின் தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்லல் தொடர்பான போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு சான்றுகளின் அடிப்படையில் கணக்கீடு தொடர்பாக நிறுவனத்தின் தொடர்ச்சியாக முன்னெடுத்துச்செல்லல் தொடர்பான அடிப்படையைப் பிரயோகிப்பதற்கான இயைபுடைமையானது தீர்மானிக்கப்பட்டது. போதியளவு நிச்சயமற்றதன்மை காணப்படுவதாக நான் அனுமானிப்பதானது நிதிக்கூற்றுகளில் அது தொடர்பான வெளிப்பாடுகள் மீது எனது கணக்காய்வு அறிக்கையின் கவனத்தை செலுத்தியதுடன், அவ் வெளிப்பாடுகள் போதியளவு காணப்படாத பட்சத்தில் எனது அபிப்பிராயத்தை நான் மீளப்பெறவேண்டும். எவ்வாறாயினும் எதிர்காலத்தில் நிகழக்கூடிய சம்பவங்கள் மற்றும் நிலைப்பாடுகளின் அடிப்படையில் தொடரச்சியாக முன்னெடுத்துச்செல்லலுக்கான அடிப்படையானது நிறைவடையக்கூடும்.

- வெளிப்பாடுகளை உள்ளடக்கிய நிதிக்கூற்றுகளின் சமர்ப்பிப்பு, கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் போன்றவை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் அவற்றுக்கு அடிப்படையாக அமைந்த கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமாக நிதிக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளதானது மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் மூலம் கண்டறியப்பட்ட முக்கியமான கணக்காய்வு தொடர்பான கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் மற்றும் ஏனைய காரணிகள் தொடர்பாக நிர்வாகம் செய்யும் தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. ஏனைய நடைமுறை மற்றும் சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

**2.1.** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் தேவைகள் தொடர்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2.1.1.** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (அ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க, எனது அறிக்கையின் கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை என்ற பிரிவில் விபரிக்கப்பட்டுள்ள பாதிப்புகளை தவிர கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கமளித்தல்கள் என்னால் வழங்கப்பட்டுள்ளதுடன், முகவராண்மையால் உரிய முறையில் நிதி அறிக்கை முன்னெடுத்துச் சென்றுள்ளமையானது எனது ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

**2.1.2.** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய முகவராண்மையால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றானது கடந்த ஆண்டுடன் ஒத்துள்ளது.

**2.1.3.** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய கடந்த ஆண்டில் என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**2.2.** பின்பற்றப்பட்டுள்ள நடைமுறைகள் மற்றும் பெறப்பட்டுள்ள சான்றுகளின் அடிப்படையில் மற்றும் மற்றும் போதியளவு காரணிகளுக்கான வரையறைக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுகளை முன்வைக்கும் அளவிற்கு எதுவம் எனது கவனத்தை எட்டவில்லை.

**2.2.1.** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க முகவராண்மையின் நிர்வாகக்குழுவின் உறுப்பினர் ஒருவர் முகவராண்மை சம்பந்தப்பட்ட எந்தவொரு உடன்படிக்கை சம்பந்தமாக நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரண வர்த்தகம் சார் நிலைக்கு அப்பாற்பட்ட வகையில் தொடர்புடையவராவார் என்பது.

**2.2.2.** 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (உ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு இணங்க ஏதாயினும் இயைபுடைய எழுதப்பட்ட சட்டத்திற்கு அல்லது முகவராண்மையின் நிர்வாகக் குழுவினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான விதிமுறைகளுக்கு இணங்க செயற்படவில்லை என்பது.

2.2.3. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவராண்மையின் அதிகாரங்கள்இகடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு விதிமுறைகளுக்கு இணங்க செயற்படவில்லை என்பது.

2.2.4. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு இணங்க முகவராண்மையின் வளங்களை கையாளுதல், வினைத்திறனான மற்றும் பயன்தரு வகையில் குறித்த காலவரையறைக்குள் உரிய விதிமுறைகளுக்கு இணங்க பெறுகைகளுக்கான நடைமுறைகள் மேற்கொள்ளப்பட்டு பயன்படுத்தப்படவில்லை என்பது.

## 2.3. ஏனைய காரணிகள்

அ) இலங்கையில் நடாத்தப்படும் ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதோடு பாரம்பரிய மருந்துகள் , உணவு மற்றும் பானங்களின் உள்ளடக்கங்கள் மற்றும் அவற்றில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதை நோக்காகக் கொண்டு முகவராண்மையின் ஆராய்ச்சிப் பிரிவிற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 101 மில்லியன் ரூபாயானது (வரியுடன் கூடிய) பணத்தொகையானது அரசின் ஒன்றிணைந்த நிதியின் கீழ் வழங்குவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரமானது 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் கீழ், 2018 ஆம் ஆண்டு செப்படம்பர் மாதம் 18 ஆம் திகதி பெறப்பட்டது. அதற்கிணங்க பெறுகைகளுக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 2020 அம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி முகவராண்மைக்கு கிடைக்கப்பெற்ற இவ் ஆராய்ச்சி உபகரணங்கள் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ம் திகதிக்குள் ஸ்தாபிக்கப்படவிருந்தது. மீளாய்வுக்கான ஆண்டின் நிதிக்கூற்றின் மூலதனக்குறைவேலைபாடுகளின் கீழ் ரூபாய் 60211400 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்படப்பட்டுள்ளதோடு இவ் ஆய்வுகூட உபகரணங்களின் பாவனைக்கு தேவையான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்குத் தேவையான நிபுணத்துவ சேவை போன்றவற்றைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மற்றும் உபகரணங்கள் உரியமுறையில் செயற்படுவதை உறுதிசெய்யும் நிபுணத்துவ பரிசோதனை அறிகையானது கிடைக்கப்பெறாமை காரணமாக ஆய்வுகூட செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை வீர வீராங்கணைகள் ஊக்குமருந்து பாவனை தொடர்பாக குற்றஞ்சாட்டப்படுவதற்கான அபாயத்தை குறைத்து உயிர்ப்புடன் கூடிய விளையாட்டை ஊக்குவிப்பதற்கான பிரதான நோக்கத்தை அடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

ஆ) குதிரைகளுக்கான ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனை நடாத்துவதற்காக விளையாட்டு சம்மேளனமொன்றின் மூலமாக 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தினத்தன்று ரூ.6,24,100 பணத்தொகையானது அறவிடப்படவேண்டியிருந்தது. அப்பணத்தொகையில் ரூ.2,21,600 ஆனது ஒன்பது மாத காலம் முதல் அறவிடப்படாத மீதியாகக் காணப்பட்டது.

இ) முகவராண்மையின் 2021 ஆம் ஆண்டுக்காக பணிப்பாளர்(அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்) பதவியானது முகவராண்மை ஸ்தாபிக்கப்பட்டு 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது.

**டபிள்யு.பீ.சீ. விக்ரமரத்ன**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் 2021 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்று உள்ளடங்களாக அதனோடு தொடர்புடைய செயற்பாடுகள் சம்பந்தமாக 1971 இல 38 இற்கான நிதிச் சட்டத்தின் 13(7)(ஏ) வாசகத்திற்கமைவாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் முன்வைக்கப்பட்ட காரணிகள் தொடர்பாக நிர்வாகத்தினால் முன்மொழியப்பட்ட படிமுறைகள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளது

## ஏனைய விடயங்கள்

### காரணி 01 - ஏனைய காரணிகள்

இலங்கையில் நடாத்தப்படும் ஊக்குமருந்து கட்டுப்பாட்டுப் பரிசோதனைகள் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படுவதோடு பாரம்பரிய மருந்துகள், உணவு மற்றும் பானங்களின் உள்ளடக்கங்கள் மற்றும் அவற்றில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனவா என்பதை கண்டறிவதனை நோக்காகக் கொண்டு முகவராண்மையின் ஆராய்ச்சிப் பிரிவிற்குத் தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 101 மில்லியன் ரூபாயானது (வரியுடன் கூடிய) பணத்தொகையானது அரசின் ஒன்றிணைந்த நிதியின் கீழ் வழங்குவதற்கான அமைச்சரவையின் அங்கீகாரமானது 2019 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் கீழ், 2018 ஆம் ஆண்டு செப்படம்பர் மாதம் 18 ஆம் திகதி பெறப்பட்டது. ஆதற்கிணங்க பெறுகைகளுக்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் 2020 அம் ஆண்டு மார்ச் 15 ஆம் திகதி முகவராண்மைக்கு கிடைக்கப்பெற்ற இவ் ஆராய்ச்சி உபகரணங்கள் 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 05ம் திகதிக்குள் ஸ்தாபிக்கப்படவிருந்தது. மீளாய்வுக்கான ஆண்டின் நிதிக்கூற்றின் மூலதனக்குறைவேலைபாடுகளின் கீழ் ரூபாய் 60,211,400 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக குறிப்படப்பட்டுள்ளதோடு இவ் ஆய்வுகூட உபகரணங்களின் பாவனைக்கு தேவையான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி செயற்பாடுகளுக்குத் தேவையான நிபுணத்துவ சேவை போன்றவற்றைப் பெறுவதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மற்றும் உபகரணங்கள் உரியமுறையில் செயற்படுவதை உறுதிசெய்யும் நிபுணத்துவ பரிசோதனை அறிகையானது கிடைக்கப்பெறாமை காரணமாக ஆய்வுகூட செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டுள்ளது. அதனடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை வீர வீராங்கணைகள் ஊக்குமருந்து பாவனை தொடர்பாக குற்றஞ்சாட்டப்படுவதற்கான அபாயத்தை குறைத்து உயிர்ப்புடன் கூடிய விளையாட்டை ஊக்குவிப்பதற்கான பிரதான நோக்கத்தை அடைவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது.

**நிர்வாகத்தின் கருத்து**

இலங்கை ஊக்குப்பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மையின் ஆய்வுகூடத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்களில் ரூபாய 60,211,400 பெறுமதியான LC-MS/MS (SHIMADZU – 8050) உபகரணம் மாத்திரம் பாவனைக்கு உகந்ததல்லாத (காலவரையறையற்ற)

மட்டத்தில் காணப்படுகின்றது. அதற்குக் காரணம் அவ்வுபகரணத்தின் தொழிற்பாட்டை காண்பிக்கும் பரிசோதனை (PQ-Test) மற்றும் அதனை பாவிப்பதற்குத் தேவையான தொழிநுட்ப பயிற்சியானது இலங்கைக்கான முகவரான ஹேலீஸ் நிறுவனத்தால், ஒப்பந்தத்தின் பிரகாரம் இன்றுவரை நிறைவ செய்யவதற்கு இயலவில்லை. எனினும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின்போது நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையின் காரணமாக சிங்கப்பூரிலிருந்து SAP யின் வருகையானது தாமதமானது.

அதற்கான தீர்வாக ஹேலீஸ் நிறுவனத்தின் பணியாளர் குழுவால் SAP யை இணையத்தள தொழிநுட்ப வாயிலாக (online) தொடர்புகொண்டு பயிற்சி நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. எனினும் அப் பகுப்பாய்வின்போது ஒரு இரசாயனப் பதார்த்தத்திற்காக (exemestane) குறித்த உபகரணத்தால் வழங்கப்பட்ட முடிவானது ஏற்றுக்கொள்ளமுடியாத மட்டத்தில் காணப்பட்டமையால் ஹேலீஸ் நிறுவனத்தினால் பயிற்சி நடவடிக்கையானது நிறுத்தப்பட்டு SAP ளின் ஆலோசனைகளுக்கு அமைய உபகரணம் தொடர்பான சிக்கலை தீர்ப்பதற்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

2021 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கிடையில் நிலவிய கோவிட் பயணத்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமையால் SAP யை இலங்கைக்கு வரவழைக்கும்படி எமது நிறுவனத்தால் இடைக்கிடை ஹேலீஸ் நிறுவனத்திற்கு வலியுறுத்தப்பட்டது. எனினும் SAP யினது இலங்கை வருகை தொடர்ச்சியாக தாமதமானதால் இரண்டாவது தடவையாக ஹேலீஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளோடு PQ-Test மற்றும் பயிற்சி நடவடிக்கை நவம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்போது முதற்தடவையாக ஏற்பட்ட சிக்கலானது மீண்டும் ஒருதடவை உபகரணத்தில் தோன்றியதோடு ஹேலீஸ் நிறுவனத்தினால் குறித்த சிக்கலை தீர்ப்பதற்கான செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டது.

அதன் காரணமாக 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் ஆனபோதும் LC-MS/MS உபகரணத்தை பயன்படுத்துவதற்கு இயலவில்லை. இவ் உபகரணத்தின் தொழிற்பாட்டை உரிய வகையில் காண்பிக்கும் வரை உபகரணமானது நிறுவனத்தால் ஏற்றுக்கொள்ளப்படல் மற்றும் உத்தரவாதக் காலப்பகுதியினது (Warranty Period) தொடக்கம் மற்றும் எஞ்சிய பணத்தொகையை செலுத்துவதற்கு அல்லது செலுத்துவதை இடைநிறுத்துவற்கு எமது நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவினால் தீர்மானிக்கப்பட்டது.

- **2022 ஆகஸ்ட் மாதத்தின்போது அதன் புதிய நிலைமை**

SAP இலங்கைக்கு வருகை தந்து நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி உபகரணத்தில் ஏற்பட்டிருக்கும் சிக்கலை தீர்ப்பதன் முக்கியத்துவமானது எமது நிறுவனத்தால் இடைக்கிடை சுட்டிக்காட்டப்பட்டதோடு 2022 ஆம் ஆண்டில் இலங்கையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியின் காரணமாக தன்னால் கூடிய விரைவில் இலங்கைக்கு வருகைதர இயலாது என குறித்த விசேட நிபுணரால் எமக்கு தெரிவிக்கப்பட்டது. இதன் காரணமாக 2022 ஜுலை மாதம் 25 ஆம் திகதி மூன்றாவது தடவையாக ஹேலீஸ் நிறுவனத்தின் பிரதிநிதிகளோடு PQ-Test மற்றும் பயிற்சி நடவடிக்கை மீள ஆரம்பிக்கப்பட்டது எனினும் குறித்த சிக்கலானது அவ்வாறே நிலவியது. அதனால் ஹேலீஸ் நிறுவனத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆகஸ்ட் மாதத்தில் எமது நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவால் தீர்மானிக்கப்பட்டது. அதனால் ஹேலீஸ் நிறுவனத் திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு ஆகஸ்ட் மாதத்தில் எமது நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவால் தீர்மானிக்கப்பட்டது.

காரணி 02

குதிரைகளுக்கான ஊக்குப்பதார்த்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனை நடாத்துவதற்காக விளையாட்டு சம்மேயனமொன்றின் மூலமாக 2021 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தினத்தன்று ரூ.6,24,100 பணத்தொகையானது அறவிடப்படவேண்டியிருந்தது. அப்பணத்தொகையில் ரூ.2,21,600 ஆனது ஒன்பது மாத காலம் முதல் அறவிடப்படாத மீதியாகக் காணப்பட்டது.

**நிர்வாகத்தின் கருத்து**

Turf Club இனால் அறவிடப்படவேண்டிய பணத்தொகையானது பெற்றுக்கொள்வதற்காக அந்நிறுவனத்திற்கு பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டதோடு குறித்த வருமதியை சேகரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனை தெரிவித்துக்கொள்கிறேன்.

காரணி 03

முகவராண்மையின் 2021 ஆம் ஆண்டுக்காக பணிப்பாளர் (அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்) பதவியானது முகவராண்மையானது ஸ்தாபிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு முதல் வெற்றிடமாகக் காணப்பட்டது.

**நிர்வாகத்தின் கருத்து**

பணிப்பாளர் (அமலாக்கம் மற்றும் செயற்படுத்தல்) பதவி நியமனத்திற்காக பல சந்தர்ப்பங்களிலும் பிரபலமான பத்திரிக்கைகளில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டதோடு பொருத்தமான விண்ணப்பதாரி முன்வராததன் காரணமாக அப் பதவிக்கான வெற்றிடமானது தொடர்ந்து நிலவி வருகின்றது. தற்போது அப்பதிவிக்கான தகைமைகளுடன் கூடிய சிரேஷ்ட பிரதி பொலிஸ் அதியட்சகர் பதவி நிலைக்குக் குறையாத உத்தியோகத்தர் ஒருவரை இரண்டாம் நிலை நியமனத்தின் அடிப்படையில் நியமிப்பதற்கு எமது நிறுவனத்திற்குப் பொறுப்பான அமைச்சினூடாக இலங்கை பொலிஸிற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# වාර්ෂික වාර්තාව
# வருடாந்த அறிக்கை
# Annual Report

## -2021-




**ශ්‍රී ලංකා උත්තේජක මර්දන නියෝජ්‍යායතනය**

**இலங்கை ஊக்குமருந்து பயன்பாட்டிற்கெதிரான முகவராண்மை**

**SRI LANKA ANTI-DOPING AGENCY**

363/12, සුගතදාස ස්ටේඩියම්-බ්ලෝක් ඩී, ක්‍රීඩා සංකීර්ණ රථගාල පාර, සිරිමාවෝ බණ්ඩාරනායක මාවත, කොළඹ 14.

363/12, சுகததாச விளையாட்டரங்கு-ப்ளொக் டி, ஸ்டேடியம் பார்க்கிங் ரோட்,
சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14.

No 363/12, Sugathadasa Stadium-Block D, Stadium Parking Road, Sirimavo Bandaranaike Mawatha, Colombo 14.

Tel: 011 3071 838 / 011 2328 366    Email: sladasl@yahoo.com    Website: www.antidopingsrilanka.org